REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 31 புதன்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 205 | Wednesday 31, August, 2022 | 48பக்கங்கள் | 40/-

இலங்கை பொருளாதார நெருக்கடியை தீர்க்கும்

IMF மூலமான உதவிகளுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு

பொருளாதார நெருக்கடி தீர்வுக்கான உடன்படிக்கை எட்டப்பட்டால்,சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் இலங்கைக்கு ஐக்கிய அமெரிக்க அரசு ஆதரவளிக்கும் என்று இலங்கைக்கான தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். 06

போஷாக்கு குறைபாடுள்ள சுமார்

61,000 குடும்பங்களுக்கு ரூ.10,000 கொடுப்பனவு



அடுத்த 04 மாதங்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானம்

வசதி குறைந்த கர்ப்பிணிகளுக்கு ரூ.2,500 மேலதிக கொடுப்பனவு

2022 இடைக்கால பட்ஜட் முன்மொழிவில் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் தற்போது மிகவும் அவசர உதவி தேவைப்படும் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட சுமார் 61,000 குடும்பங்கள் காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 2022 ஆம் ஆண்டில் எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு அவ்வாறான குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தம் 10,000 ரூபாவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார். 06

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் முக்கியமான விடயங்கள்...

- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் 20,000 ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் 2,500 ரூபா மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்படும்.
- அடுத்தவருடம் சுற்றுலாப் பயணிகள் 5 இலட்சம் பேரை நாட்டிற்கு கொண்டுவர அரசாங்கம் திட்டம்
- அரச துறையின் பயன்பாட்டுக்காக எதிர்காலத்தில் மின்வலு கொண்ட வாகனங்கள் மாத்திரமே கொள்வனவு செய்யப்படும்.
- மண்ணெண்ணெய் விலை உயர்வால் பாதிக்கப்பட்ட சிறு மீன்பிடி படகு மீனவர்கள் மற்றும் மின்சார வசதியற்ற பெருந்தோட்ட மக்களுக்கு நிவாரணம்.
- பொருளாதார நெருக்கடியை குறைக்க சமூக ஸ்திரத்தன்மையை மீள நிர்மாணிக்க 133 பில்லியன் ஒதுக்கீடு.
- சமுர்த்தி உதவி பெறும் 1.7 மில்லியன் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5,000 ரூபா கொடுப்பனவு 7,500 ரூபாவாக அதிகரிப்பு.
- சமுர்த்தி கொடுப்பனவுகளுக்காக காத்திருக்கும் 726,000 குடும்பங்களுக்கு தற்காலிகக் கொடுப்பனவாக 5,000 ரூபா உதவித் தொகை.
- முதியோர், அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான 5,000 ரூபா கொடுப்பனவு 7,500 ரூபாவாக அதிகரிப்பு.
- உதவிக்காக காத்திருக்கும் முதியோர், அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு தற்காலிக கொடுப்பனவாக 5,000 ரூபா வழங்க நடவடிக்கை.
- அரசாங்க ஊழியர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு 05 வருட காலம் சம்பளமற்ற விடுமுறை.
- அரசாங்க மற்றும் அரச சார்பு ஊழியர்களின் ஓய்வூதியம் பெறும் வயது இவ்வருடம் டிசம்பர் 31 முதல் அமுலுக்கு வரும் வகையில் 60 ஆக குறைப்பு. 06



மோசமானதொரு பொருளாதார நெருக்கடியில் சிறந்த பட்ஜட் 06

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



அதிக வருமானம் பெறுவோர் அதிக வரி செலுத்தும் முறை அவசியம் 06

இடைக்கால பட்ஜட் குறித்து ஹர்ஷ டி சில்வா



செலவினங்களை குறைப்பதே இந்த பட்ஜட்டின் நோக்கம் 06

வற் வரியின் அதிகரிப்பு மக்களை பாதிக்கும்



நகர்வலம்



நீர்கொழும்பு ஒரியன்ட் சிங்கக் கழகம் ஒழுங்கு செய்த இரத்த தான நிகழ்வு நேற்று (30) காலை 08.00 மணி முதல் நீர்கொழும்பு ஸ்ரீ விஜயபால மெண்டிஸ் சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தில் (கொப்பரா சந்தி அருகில்) நடைபெற்றது. நாட்டில் தற்போதுள்ள தொற்று நோய் பரவும் நிலவரத்தில் குருதி உற்பத்திக்கான தேவையை பூர்த்தி செய்வதற்காக தேசிய இரத்த மாற்று சேவைக்கு இரத்த தானம் செய்வதே இந்நிகழ்ச்சி நிரலின் பிரதான நோக்கமாகும். இதற்காக பலரின் பங்களிப்பு கிடைக்கப்பெற்றதோடு, கொவிட் 19 பரவலை தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி இந்நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்றங்களின் கட்டட நிர்மாணங்களுக்கு ஒப்புதல் அளிக்க ஒன்லைன் (online) முறை அறிமுகம்

விரைவில் நடைமுறைக்கு வரும் என்கிறார் அமைச்சர் பிரசன்ன



உள்ளூராட்சி மன்றங்களின் கட்டட திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க ஒன்லைன் (online) முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதோடு நாடளாவிய ரீதியில் உள்ள 337 உள்ளூராட்சி நிறுவனங்களில் இந்த முறை விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இன்னும் இரண்டு மாதங்களில் இது நடைமுறைக்கு வரும் எனவும் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கும் இடையில் திங்கட் கிழமை (29) பத்தரமுல்ல செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் போது உள்ளூராட்சி சபை மட்டத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

கட்டிடங்கள் கட்ட ஒப்புதல் பெறுவதில், 9000 சதுர அடிக்கு குறைவான நிலத்திற்கான அனுமதி சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிக்கு ஒதுக்கப்படுகிறது. நிலம் 9000 சதுர அடிக்கு மேல் இருந்தால் அல்லது கட்டிடம் 5 மாடிக்கு மேல் இருந்தால் அனுமதி வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் திட்டங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் கிடைப்பதில் பல்வேறு காலதாமதம் ஏற்படுவதாக உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சில அதிகாரிகள் தங்கள் வீடுகளுக்கு கடிதக் கோப்புகளை அழைப்பிப்பதாகவும், உள்ளூராட்சி அமைப்புகளின் திட்ட ஒப்புதல் குழுவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பங்கேற்பதில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார். திட்டமிடல் குழுவில் நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளின் பங்கேற்பை கட்டாயமாக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சைவ மங்கையர் வித்தியாலயத்தில் 20 மாணவியருக்கு '3 ஏ' தர சித்தி

மருத்துவபீடத்திற்கு 10 மாணவிகள் தகுதி



கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்திலிருந்து 2021 ஆம் ஆண்டிற்கான உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவியர்களில் 20 பேர் 3 பாடங்களிலும் 'ஏ' தரச் சித்திபெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். இதன்படி உயிரியியல் விஞ்ஞான துறையில் 9 பேரும், பௌதீக விஞ்ஞான பிரிவில் 3 பேரும், வர்த்தகத்துறையில் 8 பேரும் என 20 பேர் '3 ஏ' உயர்தர தரச் சித்தியைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை, 7 மாணவியர்கள் 2ஏ,பி சித்திகளையும், 9 மாணவியர்கள் ஏ 2பி, 3 மாணவியர்கள் 2ஏ, சி சித்திகளையும், 6 மாணவியர்கள் ஏ,பி,சி சித்திகளையும், 6 மாணவியர்கள் ஏ, 2சி சித்திகளையும் மற்றும் 7 மாணவியர்கள் 3பி சித்திகளையும், 9 மாணவியர்கள் 2பி, சி சித்திகளையும், 13 மாணவியர்கள் பி, 2சி சித்திகளையும், மற்றும் 9 மாணவியர் 3 சி பெற்றுள்ளதுடன் 144 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என கல்லூரியின் அதிபர் திருமதி அருந்ததி இராஜவிஜயன் தெரிவித்துள்ளார்.

கடாண்டுகம ஜாயா மாணவன் உயிரியல் பிரிவில் 3A சித்தி

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)



வெளியான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி அ/ கடாண்டுகம ஜாயாஹ்ற் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உயிரியல் பிரிவில் பரீட்சைக்கு தோற்றிய செல்வன் ஏ.ஆர். அன்சப் 2ஏ,1பீ சித்தியினைப் பெற்று மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இவர் 2.1850 இஸட் ஸ்கோர் பெற்று மாவட்டத்தில் 9 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இவர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கும் அதே பாடசாலையில் கல்வி கற்று 9 ஏ சித்தியினை பெற்று வரலாற்று சாதனையை ஏற் படுத்தினார். நெல்லியகம கிராமத்தில் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகும் மூன்றாவது மாணவனாகும். இவர் முதல் தடவையாக பரீட்சையில் இந்த பெறுபேற்றை பெற்று சாதனை நிகழ்த்தியுள்ளார். இவர் பொறியலாளர் அப்துல் ரஹீம் மற்றும் நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆங்கில பாட ஆசிரியை ஜே. ஜாஹிஸா தம்பதிகளின் இரண்டாவது புதல்வராவார். இவரின் மூத்த சகோதரன் ஏ.ஆர்.அர்ஷாட் கான் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட இறுதியாண்டு மாணவராகவும் தனது கல்வியை தொடர்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தாயினால் கைவிடப்பட்டு வாழ்ந்து வந்த

இரு சிறுமிகளையும் பொலிஸார் பொறுப்பேற்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



மெதிரிகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யுதஹனாவ பகுதியில் பாதுகாப்பற்ற வீடொன்றில் வசித்துவந்த இரு சிறுமிகளை பொறுப்பேற்றுக்கொண்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

ஒரு சிறுமிக்கு 9 வயதென்றும் மற்றைய சிறுமிக்கு 4 வயதும் 6 மாதமும் என பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமிகளின் தாய் கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்பு கணவரையும் பிள்ளைகளையும் கைவிட்டு சென்றுள்ளதாகவும் தந்தையின் அரவணைப்பில் இரு சிறுமிகளும் வாழ்ந்து வந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

அந்த வீட்டில் பாட்டியுடன் வாழ்ந்து வந்த மேற்படி இரு சிறுமிகளும் பாட்டியை சுத்தம் செய்யும் பணியையும் இவர்கள் இருவரும் மேற்கொண்டு வந்துள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த வீடு மிகவும் அசுத்தமாக இருந்து வந்துள்ளதுடன் சிறுமிகள் இருவரும் மிகவும் பாதுகாப்பற்ற விதத்தில் வசித்து வருவதாக கிராம வாசிகள் சிறுவர் அதிகார சபைக்கு வழங்கிய தகவலுக்கு அமைய பொலிசார் குறித்த வீட்டுக்குச் சென்ற போது சிறுமிகள் இருவரும் பாதுகாப்பற்ற விதத்தில் வசித்து வருவதை அவதானித்துள்ளனர். உணவின்றி இருந்த சிறுமிகள் இருவருக்கும் உணவளித்து பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் அவர்களுக்கு உடை மற்றும் பாடசாலை உபகரணங்களையும் வழங்கி இரு சிறுமிகளையும் பொறுப்பேற்றுள்ளனர்.

அநு./ மனாறும் உலூம் சிறந்த பெறுபேறு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் கம்பிரிகஸ்வெவ மனாறுல் உலூம் மகா வித்தியாலயம் 2021 ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளதாக அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் தெரிவித்தார்.

பரீட்சை பெறுபேறுகளின்படி என்.சப்ரா 3 A , வை. நசீஹா பேகம் 2A B , எப்.எப்.நஸ்மியா 2A B, ஐ.எப். ரிஸ்மினா 2A B , ஏ. நப்ரா A, B, C , வீ. றபீசா A, 2C ,ஆர். எப். ஹம்தா A, B, C , ஐ. இப்திகா சரீன் 2B, C ,ஐ. சஹ்ரானி B, 2C , எச்.றிமாஸ் B, 2C ஆகியோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

தீ விபத்தினால் வீடு முற்றாக எரிந்து நாசம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



உடப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிவாசல்பாடு கிராமத்தில் உள்ள வீடொன்றில் நேற்று (30) காலை ஏற்பட்ட தீ விபத்தினால் வீட்டிலுள்ள அனைத்து பொருட்களும் தீயில் எரிந்து சாம்பராகியுள்ளன.

வீட்டில் தாயும், தந்தையும் வெளியே சென்ற நிலையில் வீட்டில் இருந்த மகள் தேநீர் தயாரிப்பதற்காக தண்ணீர் கொதிக்க வைத்தபோதே குறித்த வீடு தீப்பிடித்து எரிந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அந்த வீட்டில் இருந்த ஆடைகள், உணவுப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், தளபாடங்கள் என சகல பொருட்களும் தீயில் எரிந்து சாம்பராகியுள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் இந்த தீ விபத்துச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த பொலிஸார், வீடு முழுமையாக எரிந்து போயுள்ளதாகவும் குறிப்பிட்டனர். இந்த சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆண்டிமுனை த.ம.வித்தியாலய மாணவர்கள் சிறந்த பெறுபேறு

உடப்பு குறூப் நிருபர்

அண்மையில் வெளியான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் புத்தளம் தெற்குக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் கலைப்பிரிவில் கல்வி பயின்ற 19 மாணவ மாணவிகள் சித்தியடைந்துள்ளனர். இதில் செல்வி பூவையா ஜதுர்சனா கலைப் பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

கலைப் பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் செல்வி கலைச்செல்வன் திருஷா 1ஏ,2பி, செல்வி முருகேசு சங்கீர்த்தனா 2ஏ,1பி, செல்வி மகாதேவன் ஜீவஹர்ணி 1ஏ,1பி,1சி,செல்வி வரதராஜன் சௌமியா 1ஏ,2சி, செல்வி பூவேந்திரன் அனோஜா 2ஏ,1பி, அருட்செல்வன் அனுஷா 2பி,1சி சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை இக்ரா பாடசாலையின் 10 வருட பூர்த்தி விழா



ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

கல்வியமைச்சின் ஆயிரம் பாடசாலை தேசியவேலைத் திட்டத்தின் கீழ், தென் மாகாண சபையின் வேண்டுகோளின் பேரில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் தனியான ஆரம்ப பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தின் பத்து வருட பூர்த்தியை முன்னிட்டு பெற்றோர்களுக்கான விசேட வழிகாட்டல் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். இஸட். எம் இர்பான் தலைமையில் ஸாஹிரா தேசிய பாடசாலையின் பிரதான மண்டபத்தில் (29) நடைபெற்றது.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முறையே அஷ்ஷெய்க் ஹஸன் பரீத் பின்னூரி மற்றும் அஷ்ஷெய்க் முர்ஷித் முளப்பர் ஹுமைதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந் நிகழ்வில் ஸாஹிரா தேசிய பாடசாலையின் பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கனேவல்பொலயில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு; மக்கள் கவலை

கெக்கிராவ குறூப் நிருபர்



கடந்த சில நாட்களாக கெக்கிராவ கனேவல்பொல பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மாலை 6 மணிக்கு பின்னர் காட்டு யானைகள் ஊருக்குள் பிரவேசிப்பதாகவும், வீடுகளுக்குள் வைத்துள்ள நெல் மூட்டைகளை சாப்பிட முயற்சிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியைப்போல் ஊருக்குள் புகுந்த காட்டு யானை ஒரு சிலரின் வீடுகளுக்கு சிறிய சேதங்களை ஏற்படுத்தியதோடு ஊர் மக்களின் 1 மணி நேர முயற்சியினால் காட்டுக்குள் விரட்டியடிக்கப்பட்டுள்ளது.

யானைகள் ஊருக்குள் பிரவேசித்ததும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கனேவல்பொல கிளைக்கு மக்கள் தகவல் கொடுத்தாலும் மக்களின் முயற்சியினால் யானைகள் விரட்டியடிக்கப்பட்ட பின்னரே அவர்கள் குறித்த இடத்திற்கு விஜயம் செய்வதாக ஓர் குற்றச்சாட்டும் இருக்கின்றது.

நாட்டின் பல பகுதிகளிலும் காட்டு யானைகள் தாக்கி உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகி வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் வனஜீவராசிகள் திணைக்களம் விரைந்து செயல்படவில்லை என்றால் பல உயிரிழப்புகள் எமது பிரதேசத்திலும் ஏற்படலாம் என பிரதேசவாசிகள் அச்சப்படுகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 31 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்
30 முதல் 31 வரை
சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.19
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆவணி 15
ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திதித்துவயம்

இராசி பலன்கள்
மேஷம் - நன்மை
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - சுகம்
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - செலவு
கும்பம் - மறதி
மீனம் - பொறுமை

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

சகல கட்சிகளையும் உள்வாங்கி தேசிய சபை

நகல் சட்டமூல வரைவுக்கு ஏற்பாடு



பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய சபை ஒன்றை அமைப்பதற்கான நகல் சட்டமூல வரைவுக்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, இதுதொடர்பான நகல் சட்டமூலத்தை கட்சித்தலைவர்களிடம் முன்வைத்துள்ளார். பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இது சமர்ப்பிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தின் துறைசார் கண்காணிப்பு நிறைவேற்றுக்குழுக்களை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனை குறித்தும் அங்கு கலந்துரையாடப்பட்டது. இதன்போது கட்சித்தலைவர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர்.

பாராளுமன்றத்தில் கட்சிகளின் பொது இணக்கப்பாட்டுடன் கொள்கையளவிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டுவது இந்த தேசிய சபையின் நோக்கமாக இருக்க வேண்டும் என கட்சித்தலைவர்கள் குறிப்பிட்டனர்.

தேசிய சபை மற்றும் துறைசார் கண்காணிப்பு நிறைவேற்றுக்குழுக்கள் பற்றி அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனை தொடர்பில் அந்தந்த கட்சிகளின் கருத்துக்களை விரைவில் எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளவும் இதன் போது தீர்மானிக்கப்பட்டது.

06

இலங்கையின் கடன் விவகாரம்

கடன் வழங்குநர்களை ஒன்றிணைக்க ஜப்பான் தயார்



இலங்கையின் கடன் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர் நாடுகளும் ஒன்றிணைவது அவசியமானது என ஜப்பானிய நிதி அமைச்சர் ஷுனிச்சி சுசுகி (Shunichi Suzuki) தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கையின் ஏனைய கடன் வழங்குநர் நாடுகளை ஒருங்கிணைக்கும் பணிகளை ஜப்பான் முன்னெடுக்கும் என்றும் அவர் நேற்று தெரிவித்தார்.

இருதரப்பு கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைக்கு, தமது பெரிய கடன் வழங்குநர் நாடுகளை ஒன்றிணைக்குமாறு ஜப்பானை இலங்கை கோரியதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த மே மாதம் 31 ஆம் திகதி ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுடன் மெய்நிகர் சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

மசிங்க அண்மையில் ரொய்ட்டர்ஸ் செய்தி சேவையிடம் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், முன்னதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி (Yoshimasa Hayashi), அவ்வாறான ஒரு சந்திப்பை நடத்துவதற்கு தமது நாடு இலங்கையுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வில்லை என்று கூறினார்.

"நாங்கள் இலங்கை தரப்புடன் பல்வேறு தொடர்புகளை மேற்கொண்டு வருகிறோம், ஆனால் அத்தகைய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எந்த ஏற்பாடும் நடக்கவில்லை" என்று ஹயாஷி செய்தியாளர் சந்திப்பொன்றில் கூறினார்.

ஜெனீவா 51ஆவது அமர்வு செப் 12 முதல் ஒக்.07 வரை

அலி சப்ரி தலைமையிலான குழுவில் விஜயதாசவும் இணைவு





மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வு எதிர்வரும் செப்டம்பர் 12 முதல் ஒக்டோபர் 07 வரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

செப். 12ஆம் திகதி திங்கட்கிழமை திட்டமிடப்பட்டுள்ள இலங்கை தொடர்பான கலந்துரையாடலின் போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி இலங்கை தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கி, சபையில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவும் இந்தத் தூதுக்குழுவில் இணைந்து கொள்ளவுள்ளார்.

வாக்குறுதிகளை வழங்கும் வரவு செலவு திட்டமே இது

பட்ஜட் குறித்து முஜுபுர் ரஹ்மான் எம்பி கருத்து

லோரன்ஸ் செல்வநாயகம்



வாக்குறுதிகளை வழங்கிய வரவு செலவு திட்டமாகவே இந்த இடைக்கால வரவு செலவு திட்டத்தை பார்க்க முடிகிறது என ஐக்கிய மக்கள் சக்தி எம்பி முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பெருமளவு வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமையில் இதை யதார்த்தமாக்க முடியுமா என்பதே கேள்வி.

நாடு தற்போதுள்ள நிலைமையில் பொருத்தமான வரவு செலவுத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என கேள்வி எழுப்பினால் அவ்வாறு இல்லை என்றே கூற முடியும்.

அந்த வகையில் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் ஒரு கண் துடைப்பு என்றே குறிப்பிட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டம்

ஜனாதிபதியினால் சபையில் சமர்ப்பிப்பு மூன்று தினங்களுக்கு சபையில் விவாதம்

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டம் நிதியமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நான்கு முக்கிய விடயங்களை அடிப்படையாக வைத்து இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை ஆளும் கட்சியினர் வரவேற்றதுடன் மேசைகளைத் தட்டி தமது ஆரவாரத்தையும் வெளியிட்டனர்.

2022ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக 773 பில்லியன் ரூபா தொகை சேர்க்கப்பட்டு எதிர்வரும் நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவு திட்டமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

முரண்பட்ட அரசியல் நிலை பொருளாதார பாதிப்புக்கு பிரதான காரணமாக உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து மீள்வதற்காகவே இடைக்கால வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தினார்.

அதேவேளை சவால்களை வெற்றி கொண்டு 2025 ஆம் ஆண்டில் ஸ்திரமான வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் பிற்பகல் 1.00 மணிக்கு ஆரம்பமானது.

சபைக்கு வருகை தந்த ஜனாதிபதி வரவு செலவு திட்டத்தை சபையில் சமர்ப்பித்து சுமார் ஒரு மணித்தியாலம் உரையாற்றினார்.

ஒதுக்கீட்டு சட்டமூலத்துக்கு அமைய 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் (1) உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 2,796 கோடியே 44 இலட்சத்து 65 ஆயிரத்து 58,000 ரூபாவாக இருக்கும் அரசாங்கத்தின் செலவினத்தொகையானது 3,275,876,558,000 ரூபா என மாற்றப்பட்டுள்ளது.

முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்துக்கு அமைய 2022ஆம் நிதியாண்டுக்கான அரசாங்கத்தின் அமைச்சுக்களின் சேவைக்காக 2022 ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2022ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிவரை 2,796.4 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

சட்டத்தின் 2வது பிரிவின் (1) உபபிரிவின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள" மூவாயிரத்து இருநூறு பில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது" என்ற சொற்களுக்குப் பதிலாக "நாலாயிருத்து எண்பத்தியிரண்டு பில்லியன் ரூபாவை விஞ்சுதலாகாது"எனும் சொல்லை இடுவதன் மூலம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருத்தத்தின் விளைவாக 2022 நிதியாண்டில் இலங்கைக்குள் அல்லது அதற்கு வெளியே பெற்றுக் கொள்ளக் கூடிய கடன்பெறுகையானது 3,200 பில்லியன் ரூபாவிலிருந்து 4,082 பில்லியன் ரூபாவரைஅதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய பாராளுமன்றத்தின் அனுமதியின் கீழ் கடன்பெறக்கூடிய எல்லை 892 பில்லியன்

06



மீண்டும் அமைச்சர் பதவியை ஏற்கத் தயார்; TV நிகழ்ச்சியில் தம்மிக்க பெரேரா

அமைச்சுப் பதவியேற்று சில தினங்களிலேயே அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்த முன்னாள் அமைச்சரும் பிரபல தொழிலதிபருமான தம்மிக்க பெரேரா மீண்டும் அமைச்சுப் பதவி ஏற்க தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இரவு (29) தனியார் தொலைக்காட்சி சேவையொன்றின் நேரலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தம்மிக்க பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பொறுப்புகளுடன் கூடிய அமைச்சுப் பதவி வழங்கப்படுமெனின் அதனை ஏற்கத் தயார் என்றும்

06



இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பு மாநாடு

பொருளாதார பதில் செயலாளருடன் ஜித்தாவில் அமைச்சர் ஹாபிஸ் சந்திப்பு

சவூதி அரேபியாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஜித்தாவில் இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பு மாநாடு (OIC) அமைப்பின் பொருளாதார விவகாரங்களுக்கான பதில் செயலாளரும் பிரதிச் செயலாளருமான அஹ்மட் செங் கெண்டோ வை ஜித்தாவிலுள்ள OIC தலைமையகத்தில் நேற்று முன்தினம்(29) சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பில் தூதுவர் முசா குலக்லிகாய, நிருவாக மற்றும் நிதிப்பிரிவின் உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதியின் விசேட தூதுவராக சவூதி அரேபியா சென்றுள்ள அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் நடத்திய இந்த சந்திப்பின் போது சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் பக்கீர் முஹமட் அம்சா மற்றும் கொன்சியூலர் ஜெனரல் பலாஹ் மௌலானாவும் உடனிருந்தனர்.

மட்டக்குளியில் துப்பாக்கிச் சூடு; இளைஞன் உயிரிழப்பு

மட்டக்குளி – அலிவத்த பகுதியில் நேற்றுமுன்தினம் (29) இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் பலியானார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் ஒருவரே பலியானார். சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



செப். 11,12 ஆம் திகதிகளில்

மீளுருவாக்க எரிசக்தி முறைகள் கண்காட்சி கொழும்பில் ஏற்பாடு

நாட்டில் தோன்றியுள்ள எரிசக்தி பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மீளுருவாக்க எரிசக்தியை பிரபலப்படுத்தும் நடவடிக்கையாக சூரிய சக்தி உள்ளிட்ட மீளுருவாக்க எரிசக்தி முறைகள் மற்றும் உபகரணங்களை பொதுமக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கில் கண்காட்சியொன்று எதிர்வரும் 11,12 ஆகிய தினங்களில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம், இலங்கை நவீன உற்பத்தியாளர்களின் ஆணைக்குழு மற்றும் இலங்கை நிலைபெறுத்தகு வலு அதிகாரசபை என்பவற்றால் அகில இலங்கை பௌத்த சம்மேளன தலைமையகத்தில் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் தலைவர் சந்திர நிமல் வாக்கிஷ்ட தெரிவித்துள்ளார்.

நுவரெலியா – வலப்பனை பகுதியில் பஸ் விபத்து 27 பேர் காயம்

ஹட்டன் விசேட நிருபர்

மட்டு. பகுதியை சேர்ந்த 06 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி



நுவரெலியா – வலபனை பகுதியில் மாவுவா என்ற இடத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 27 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்களில் 06 பேர் பலத்த காயத்துக்குள்ளாகி நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு பகுதியிலிருந்து உடபுசல்லாவ பகுதிக்கு திருமண வீட்டுக்கு வருகை தந்து மீண்டும் மட்டக்களப்பு நோக்கி செல்லும் வழியில் மாவுவா பகுதியில் பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ்சில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக பஸ் வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

பஸ்சில் பயணித்த 27 பேருக்கும் காயங்கள் ஏற்பட்டு இதில் பலத்த காயம் ஏற்பட்ட ஆறு பேர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

விபத்து தொடர்பாக வலப்பனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆவணி மாதம் 15ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 03

குறள் தரும் சிந்தனை



அவையறிநது ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

ஒவ்வொரு சொல்லின் தன்மையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள்

மக்கள் நலன்களுக்கு முன்னுரிமை அளித்துள்ள இடைக்கால பட்ஜட்

அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வினால் நிதியமைச்சர் என்ற வகையில் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நீடித்து வரும் சூழலில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இவ்வரவு செல வுத்திட்டம் முற்றிலும் நாட்டினதும் மக்களினதும் நலன் களை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

அந்நிய செலாவணி பற்றாக்குறையினால் இவ்வரு டத்தின் ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற இப்பொருளா தார நெருக்கடி நாட்டின் அனைத்து துறைகளுக்கும் சகல மட்ட மக்களுக்கும் தாக்கங்களையும் அழுத்தங் களையும் ஏற்படுத்தக் கூடியனவாக அமைந்திருந்தது. அந்த தாக்கங்களும் அழுத்தங்களும் மக்களுக்கு சுமையாக அமைவதைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளும் ஆரம்பம் முதல் முன்னெடுக்கப்பட லாயின.

ஆனாலும் எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் எரிபொருள் நிரப்பும் நிலையங்க ளில் காத்திருக்கும் நிலைமை நீடித்தது. இந்நிலையில் இப்பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைக்கும்படி கோரி ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற லாயின. இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் தனது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்தார்.

இவ்வாறான சூழலில் அன்று பிரதமராகப் பதவி வகித்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு அமைய ஜனா திபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார். அவர் பதவிக்கு வந்தது முதல் இந்நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையிலான வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் முன்னெடுத்துள்ளார். அவரது வேலைத் திட்டங்களின் பிரதிபலன்களை நாடும் மக்களும் தற்போது பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இந்த நிலையில் நாட்டினதும் மக்களினதும் நலன் களை முன்னிலைப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டத்தை அவர் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். இவ்வரவு செலவுத் திட்டமானது நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடி யில் இருந்து மீட்டெடுப்பதையும் மக்களுக்கு நிவார ணம் அளிப்பதையும் இலக்காகக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக இப்பொருளா தார நெருக்கடி மக்களுக்கு சுமையாகவும் அழுத்தா கவும் அமையக்கூடாது என்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் இவ்வரவு செலவுத்திட்டம் பல்வேறு சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. தற் பொழுது நிலவுகின்ற நெருக்கடிகளினால், பெரும்பா லானோர் எதிர்நோக்குகின்ற சிரமங்களை குறைத்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிகரித்த சலுகை யினை வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வேலை இழப்பு, விவசாய உற்பத்திகளின் வீழ்ச்சி மற்றும் பல்வேறு காரணங்களினால் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாமை போன்றவற்றி னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவியாக மேலதிக மாதாந்தக் கொடுப்பனவொன்றை வழங்கு வதற்கு 2022 மே முதல் யூலை மாதம் வரை மேல திகமாக ரூபா 31,000 மில்லியனை அரசாங்கம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை அடுத்துவரும் நான்கு மாதங்களுக் கும் முன்னெடுக்கவும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் 20,000 ரூபாவிற்கு மேலதிகமாக மேலும் 2,500 ரூபாவினை மாதாந்த மேலதிக கொடுப்பனவாக வழங்கவும், மிகவும் அவசர உதவி தேவைப்படும் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 61,000 குடும்பங்க ளுக்கு எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு குடும்பத் திற்கு மாதாந்தம் 10,000 ரூபாவினை வழங்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டங்கள் அனைத்தையும் நான்கு மாதங்களுக்குள் செயற்ப டுத்துவதற்கு ரூபா 46,600 மில்லியனை ஒதுக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை தற்பொழுது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 3.2 மில்லியன் மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கு வதற்கு பாராளுமன்றத்தில் ஏற்கனவே சமர்ப்பிக் கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டினூடாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதனால் இவ்வரவு செலவுத்திட்டத் தின் ஊடாக சமூர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்க ளுக்கான கொடுப்பனவு என்றபடி பல்வேறு துறையின ருக்கும் சலுகைகளும் நிவாரணங்களும் வழங்கப்பட உள்ளன.

அத்தோடு நாட்டின் விவசாயத் துறையை மேம்படுத் தவும் பல சலுகைத் திட்டங்களும் அறிவிக்கப்பட்டுள் ளன. அத்தோடு மின்சார துவிச்சக்கர வண்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் திட்டங் களும் முன்மொழியப்பட்டுள்ளன.

இவ்வாறு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை கொண்டுள்ள இவ்வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக வற் வரியை 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரிக்க வும் அரச ஊழியர்கள் ஒய்வு பெறும் வயதெல்லையை 60 ஆகக் குறைக்கவும் முன்மொழியப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

முற்றிலும் நாட்டினதும் மக்களினதும் நலன்களை இலக்காகக் கொண்டுள்ள இவ்வரவு செலவுத்திட்டம் நாடு பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தையும் அழுத்தத்தையும் குறைத்துக் கட்டுப்படுத்தும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

முஸ்லிம் சமூகத்துக்கு பெரும் பணியாற்றிய மர்ஹூம் அஸ்வர்

ஹரகமையில் 1937 பெப்ரவரி 8 ஆம் திகதி பிறந்து தினகரன் செய்தியாளராக எழுத்துலகப் பயணத்தை ஆரம்பித்தவர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர். பின்னர் அறிவிப்பாளர், நேரடி வர்ணனையாளர், மொழிபெயர்ப்பாளர் என்றெல்லாம் முத்திரை பதித்துள்ளார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமை யோடு சகல இன, மத மக்களையும் அரவணைத்து அரசியல் வானில் சுடர் விட்டுப் பிரகாசித்தவர் அவர்.

முன்னாள் அமைச்சராகவும் சபாநாயகராகவும் விளங்கிய தேசமான்ய பாக்கீர் மாக்கார் மற்றும் அமைச்சராகவும் சபாநா யகராகவும் இருந்த மர்ஹூம் எம். எச். முஹம்மத் ஆகியோரின் பிரத்தியேக செயலாளராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். அதன் மூலம் அரசியல் அனுபவத்தையும் ஆளுமையையும் வளர்த்துக் கொண்டதன் விளைவாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பின ராக நியமிக்கப்பட்டார். அதன் விளைவாக தேசியப்பட்டியல் மூலம் ஐந்து தடவைகள் பாராளுமன்றம் பிரவேசித்த பெருமை இவரை சாரும்.



நாட்டின் முன்னாள் தலைவர்களான டட்லி சேனாநாயக்க, ஜே. ஆர். ஜயவர்த் தன மற்றும் சேர் ராஸிக் பரீத், டொக்டர் எம். ஸீ. எம். கலீல் போன்றோரு டன் நெருங் கிப் பழகி அவர்களின் உரைகளை நேரடி யாக தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்த்து புகழ் பெற்றுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரின் 5ஆவது நினைவுதின நிகழ்வு இன்று 31ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு 08, நாரேஹன்பிட்ட எல்விட்டிகலவில் உள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன தலைமையகத்தில் நடைபெறுகின்றது

புத்தளம் தேர்தல் தொகுதியில் முஸ்லிம் எம். பி. ஒருவர் இல்லாக் குறையை நிவர்த் திக்க இவர் தேசியப் பட்டியல் மூலம் நிய மிக்கப்பட்டார். அதன்மூலம் புத்தளத்தின் புத்தெழுச்சிக்காகத் தன்னை அர்ப்பணிப் புச் செய்தார்.

எம். பியாக இருந்து, முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சராக பதவி உயர்வு கண்டார். அந்த அமைச்சு மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு அரும் தொண் டாற்றியுள்ளார். முஸ்லிம் கலைஞர்க ளுக்கு பொற்கிழி வழங்கி கௌரவிக்கும், 'வாழ்வோரை வாழ்த்துவோம்' விருது வழங்கும் விழாவை ஆண்டுதோறும் நடத் தினார். ஹஜ் யாத்திரை ஏற்பாடுகள், அக திகளுக்கான நிவாரணப் பணிகள், மத் ரஸாக்களுக்கான நிவாரணப் பணிகள் என்று சமூக உணர்வுடன் பலதரப்பட்ட பணிகளையும் செய்தவர் அவர்.

முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் தலைதூக்கும் சந்தர்ப்பங்கள், இடங்க ளுக்கெல்லாம் நேரில் சென்று செயல்பட் டார்.

பாராளுமன்ற அமர்வுகளை தவற விடமாட்டார். அத்துடன் காலையிலே முதலாவதாகச் சென்று முழு நிகழ்ச்சியி லும் கலந்து கொண்டு, கடைசியாகவே திரும்பும் சுபாவமுள்ளவர். பாராளுமன்ற விவகாரங்கள், அதன் சட்டதிட்டங்கள், ஒழுங்குப் பிரச்சினைகள், குறுக்கீடுகள் ஆகிய அனைத்திலும் சிறந்த நுண்ணறிவுகளைப் பெற்றிருந்தார். இதன்விளைவாக இவருக்கு பாராளுமன்ற விவகார அமைச்சுப் பதவியும் வந்தடைந்தமை மற்றொரு சிறப் பம்சமாகும்.

ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகர், ஊக ஆலாட்சி அதிகாரி ஆகிய பதவிகளையும் அலங்கரித்துள்ளார். தமிழ்மொழியில் இவருக்குள்ள பரிச்சயம் காரணமாக இஸ் லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் பிரகாசித்தார். இந்தியா, மலேஷியா உள்ளிட்ட வெளிநாடுகளில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளில் கலந்து சிறப்பித்துள்ளார். மேற்படி மாநாடுகளின் முன்னோடி அல்லாமா ம. மு. உவைஸ் மற்றும் ஏற்பாட்டாளர்களுடன் இணைந்து அத்தகைய மாநாடுகளை இலங்கையிலும் நடத்த பங்களிப்பு செய்துள்ளார்.

அவர் சிறந்த ஊடவியலாளராவார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும் இருந்துள்ளார். அகில இலங்கை முஸ்லிம் லீக், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மே ளனம், வை. எம். எம். ஏ. பேரவை போன்ற அமைப்புக்களிலும் அங்கம் வகித்துப் பங்களிப்பு செய்துள்ளார்.

முஸ்லிம் விவகாரங்கள், சமய, சமூக வரலாற்றுத் தகவல்கள் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்ட நடமாடும் கலைக்களஞ் சியமாகவும் தகவல் பெட்டமாகவும் திகழ்ந்துள்ளார். அவர் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி தனது 80 ஆவது வயதில் காலமானார்.

பேருவளை **முஹமட் முக்தார்...**✍

பாடசாலை மட்ட கடின பந்து கிரிக்கெட் போட்டி;

முதற்சுற்றில் 4 போட்டிகளிலும் வென்று மாத்தறை தாருல் உலூம் அணி சாதனை

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 15 வயதுக்குக் கீழ்பட்ட 3 ஆம் பிரிவு முதற்சுற்று போட்டிகளில் மாத்தறை வலயத்தில் கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று மாத்தறை தாருல் உலூம் பாடசாலை சாதனை படைத் துள்ளது.முதல் சுற்றில் மாத்தறை மகா வித்தியாலயம். றாகுல கல்லூரி, பாலட் டுவ மத்திய மகாவித்தியாலயம் மற்றும் உயங்கொட தேசிய பாடசாலை ஆகியவற்று டனான போட்டிகளில் வென்று அடுத்த சுற் றுக்கு தகுதி பெற்றுள்ளது.

உயங்கொட தேசிய பாடசாலையுடனான போட்டியில் இனிங்சினாலும் 145 ஓட்டங் களினாலும் தாருல் உலூம் அணி அமோக வெற்றியீட்டியது.முதல் இனிங்சில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 217 ஓட்டங்களை தாருல் உலூம் அணி பெற்றது. உயங்கொட அணி முதல் இனிங்சில் 39 ஓட்டங்களை யும் இரண்டாம் இனிங்சில் 33 ஓட்டங்களை யும் பெற்றது.பந்து வீச்சில் ரசீன் 6 விக்கெட் டுகளையும் மலிச் 7 விக்கெட்டுகளையும் வீழ்த்தியதோடு துடுப்பெடுத்தாட்டத்தில் சல்ஹான் 104 ஓட்டங்களையும் (ஆ.இ) சாஜித் மற்றும் ரசீன் ஆகியோர் தலா 50 ஓட் டங்களும் பெற்றார்கள்.

மாத்தறை மத்திய வித்தியாலத்துடனான போட்டியிலும் சல்ஹான் சிறப்பாக ஆடி 73 ஓட் டங்களை பெற்றதோடு அரீப் 47 ஓட்டங்களை பெற்று அணியின் வெற்றிக்கு பங்களித்தார். தாருல் உலூம் அணி 7 விக்கெட் இழப்பிற்கு



203 ஓட்டங்கை குவித்ததோடு பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய மாத்தறை ம.வி அணி சகல விக் கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.ராஹுல அணியுடனான போட்டியை 66 ஓட்டங்களால் வென்று அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை தாருல் உலூம் அணி உறுதி செய்தது.முதலில் துடுப்பெடுத்தாடிய தாருல் உலூம் அணி 7 விக்கெட் இழப்பிற்கு 188 ஓட்டங்களை பெற்றது. ரசீன் 39 ஓட்டங்க ளையும் சாபி 36 ஓட்டங்களையும் பெற்றார்கள். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஹுல அணி 6 விக்கெட் இழப்பிற்கு 122 ஓட்டங்களை பெற்றது.

4 ஆவது போட்டியில் இனிங்சினாலும் 122 ஓட்டங்களினாலும் தாருல் உலூம் அணி வெற்றி பெற்றது. முதல் இனிங்சில் தாருல் உலூம் அணி 4 விக்கெட் இழப் பிற்கு 278 ஓட்டங்களை பெற்றதோடு அபாரமாக ஆடிய ரசீன் சதம் அடித்தார். அப்துல் மலிக் 46 ஓட்டங்களை பெற்றார். பாலட்டுவ மத்திய மகாவித்தியாலயம் முதல் இனிங்சில் 39 ஓட்டங்களையும் இரண்டாம் இனிங்சில் 138 ஓட்டங்களையும் பெற்றது. முதல் இனிங்சில் சல்ஹான் 5 விக்கெட்டு களையும் இரண்டாம் இனிங்சில் ஆகிப் 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றியமை குறிப் பிடத்தக்கது.

பாடசாலை அதிபர் எம்.ரீ.எம்.மிப்தாஹ், கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் எம்.எல்.ராஜிடீன் மற்றும் கிரிக்கெட்டுக்குப் பொறுப்பான ஆசிரி யர் எம்.எஸ்.எம்.ராதி ஆகியோரின் வழிகாட்டலு டன் தாருல் உலூம் அணி பிரகாசித்து வருகிறது. இரண்டாம் சுற்று போட்டிகள் எதிர்வரும் செப்டம் பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பாஹிம்...✍

அட்டாளைச்சேனை வைத்தியசாலையில் கட்டட நிர்மாண பணி மீண்டும் ஆரம்பம்

அட்டாளைச்சேனை பிரதேச வைத்திய சாலையில் இடைநிறுத்தி வைக்கப் பட்ட மூன்று மாடிக்குரிய கட்டட நிர் மாணப்பணிகள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் துரித நடவடிக்கை யினால் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஏ.எல்.எம்.நசீர் மேற்கொண்ட முயற்சியினால் அட் டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலைக்கு மூன்று மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது.

குறித்த கட்டடத்தின் உள்ளக வேலைகள் நிறைவு செய் யப்படாமல் காணப்பட்டதனால் கடந்த இரண்டு வருடங்க ளாக மூன்று மாடிக் கட்டடம் எவ்வித பராமரிப்பும் இல்லா மல் காணப்பட்டது.

இவ்வாறான நிலமையில் அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் நோக்கில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தொளபீக், கல்முனை பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம்.றிபாஸ் ஆகியோர் இணைந்து அண்மையில் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த தனர். இதன்போது அட்டாளைச் சேனை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் யு.எல்.எம்.வபா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகி யோரிடம் பிரதேச வைத்தியசாலையில் மேற்கொள்ள வேண்டிய அவசர அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் தற்போது ஏற்பட் டுள்ள இடநெருக்கடியால் நோயாளிகள் எதிர்கொள்ளும் அசௌ கரியங்கள் தொடர்பிலும் எடுத்துக் கூறியதுடன், இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள மூன்று மாடி கொண்ட வெளிநோயாளர் பிரிவு டன் கூடிய விடுதித் தொகுதிக்கான கட்டட நிர்மாணப் பணிகளை



விரைவில் பூர்த்திசெய்து தருமாறும் கோரிக்கையை முன்வைத் திருந்தார்.

குறித்த கோரிக்கையை கருத்திற் கொண்டு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், வைத்தியசாலையின் தற் போதுள்ள தேவையின் அவசியம் கருதி உடனடியாக துரித நட வடிக்கை எடுத்ததன் காரணமாக அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று மாடி கட்டடத் தொகுதிக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது கட்டட நிர்மாண வேலைகள் துரித கதியில் ஆரம்பிக்கப் பட்டு மிக விரைவில் முடிவடையும் தறுவாயில் உள்ளன. மேலும் மேற்படி கட்டட நிர்மாணப்பணிகள் முடிவடையும் போது அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் விடுதிக ளிலும், வெளிநோயாளர் பிரிவிலும் ஏற்படும் இடநெருக்க டிக்கு உரிய தீர்வு கிடைப்பது மட்டுமல்லாது நோயாளிகளுக் கான வசதிகளும் அதிகரிப்பதனால் அட்டாளைச்சேனை பிரதேச மக்கள் பெரும் நன்மையடையவுள்ளனர்.

இதேபோல் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் இனைந்து இன, மதம் மற்றும் பிரதேச வேறுபாடுகளைக் களைந்து இப்பிராந்தியத்திலுள்ள வைத் தியசாலைகளுக்கு கள விஜயம் மேற்கொண்டு அந்தந்த வைத்தியசாலைக்கு தேவையான அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு அயராது பாடுபட்டு வருகின்றனர். இது தொடர் பாக அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் யு.எல்.எம்.வபா கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம்.தொ ளபீக் மற்றும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் ஆகியோ ருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

றிசாத் ஏ காதர்...✍
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

உலகுக்கு வழிகாட்டியான தேசமாக திகழும் சிங்கப்பூர்

தூங்கா நகர், எதற்குமே ஏங்கா நகர் என்ற பெருமைக்குரிய சின்னஞ்சி றிய நாடுதான் சிங்கப்பூர். அக்குடியர சின் 57ஆவது தேசிய தின விழா கடந்த 9ஆம் திகதி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சுமார் 57ஆண்டுகளுக்கு முன்பாக மலேஷி யாவிலிருந்து இந்த நாடு பிரிந்த போது, இனி இது பிழைக்காது என்று ஆருடம் கூறியவர்கள் பலர். இது திசைமாறிச் செல்கிறது என்று வசை பாடியவர்களும் ஏராளம். ஆனால் இன்றைய உலகில் வளரும் நாடுகளுக்கு வழிகாட்டியாக வும் வளர்ந்த நாடுகளுக்கு திசைகாட்டியாகவும் திகழ்ந்து கொண்டிருக்கிறது சிங்கப்பூர்.

சிங்கப்பூர் அடிப்படைச் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, புராதனம் என அனைத்துத் துறைகளிலும் கடந்த 57 ஆண்டுகளிலே மகத்தான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. இன்றைய உலகில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக கடவுச்சீட்டில் சிங்கப்பூர் கடவுச்சீட்டு திகழ்கி றது. சிங்கப்பூர் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் ஏறத்தாழ 192 நாடுகளுக்கு விஸா இல் லாமலே சென்று வரக்கூடிய நிலைமை உள்ளது. அதாவது ஜப்பானுக்கு அடுத்தபடியாக சிங்கப்பூர் கடவுச்சீட்டுதான் வலி மையுள்ளதாகத் திகழ்கிறது.

சிங்கப்பூரில் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து எல் லோரும் சமம் என்ற சமத்துவத்தின் அடிப்படையி லும் திறமைக்கே முன்னுரிமை என்ற தத்துவத் தின் அடிப்படையிலும் ஊழலற்ற, பாரபட்சமற்ற ஓர் அரசு கடந்த 50 ஆ ண் டு க ளு க் கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருப்பதுதான் இந்த நாட்டினுடைய வளர்ச்சிக்குக் காரண மாகும்.



மு.ஜஹாங்கீர்...✍
(சிங்கப்பூர் உதவும் கரங்கள் (MLS Singapore) அமைப்பின் தலைவர், ஊடகவியலாளர்)



சிறப்பாகக் கொண்டாடப்பட்ட 57 ஆவது தேசிய தினம்

சிங்கப்பூர் A★STAR ACHIEVER EDUCATIONAL CENTER நிறுவனத் தின் சார்பில் நடந்தேறிய அந்நாட் டின் 57ஆவது தேசியநாள் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சிங்கப்பூர் உதவும் கரங்கள் அமைப்பின் தலைவரும் ஊடகவிய லாளருமான மு. ஜஹாங்கீர், ஆசி ரியர் பொன் சுந்தர் ராஜ், A★STAR ACHIEVER EDUCATIONAL கிளை நிறுவனத்தின் நிறுவனர் திருமதி மஹ்ஜிபீன் மற்றும் பட்டிமன்றத்தில் பங்கேற்ற இளம் மாணவ, மாணவி களை படங்களில் காண்க.

தமிழர் உள்ளத்தில் பதிந்துள்ள அழியாத நினைவுச் சின்னம் தனிநாயகம் அடிகளார்

தமிழ் ஆய்வுகளாலும் அறிவினாலும் ஆர்வத்தாலும் ஆற்றலாலும் பெருமைக்குரிய தமிழ் அறிஞராகத் திகழ்ந்தவர் வண கலாநிதி தனிநாயகம் அடிகளார் ஆவார். அவரது 42 ஆவது நினைவுதினம் நாளை செப்டம்பர் முதலாம் திகதியாகும்.

அவரது பெயரில் கொழும்பு பொரளையில் வண கலாநிதி தனிநாயகம் அடிகளார் தமிழ் வித்தியாலயத்தை எனது மாகாணசபை காலத்தில் ஸ்தாபிதம் செய்தவன் எனும் வகையில் பெருமிதமடைகின்றேன்.

கத்தோலிக்க துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் தமிழை முறைப்படி கற்றுத் தேர்ந்து தமிழ் வளர்க்கும், பரப்பும் தூதராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. 1945ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவரது தமிழ் அறிவின் ஆழத்தினையும் முதிர்ச்சியினையும் கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் இரத்தினசாமி மற்றும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் எடுத்த முடிவினால் இளமாணிப் படிப்பு முடிக்காமலே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுகலைப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1947 தொடக்கம் 1949 வரை தமிழ் இலக்கியத்தில் 'சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை' என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து எம்.லிட். பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இதில் இவர் செய்த முதல் தமிழ் ஆய்வே இவரை ஆய்வுத்துறைக்கு இட்டுச்சென்று உலகத் தமிழாய்வு வரை கொண்டு சென்றுள்ளது.

குருத்துவக் கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்ற பின்பு தனிநாயகம் அடிகளின் இயற்பெயர் நாகநாதன். புகழ்பெற்ற இந்துக் குடும்பத்தில் பிறந்தவர் கிறிஸ்தவ சமயத்தை தழுவியபோது ஏற்றுக்கொண்ட பெயர் சேவியர் ஸ்தனிஸ்லாஸ் என்பதாகும்.

ஆரம்பக் கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்று, கொழும்பில் சென்ட் பேர்னாட் செமினறியில் தத்துவவியலில் கலைமாணிப் பட்டத்தையும் (1934), தமிழ் நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் M.Litt பட்டத்தையும் பின்னர் லண்டனில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார்.

தமிழ்நாட்டில் நெல்லை மாவட்டத்தில் உள்ள வடக்கன்குளம் புனித தெரசால் உயர்நிலைப் பள்ளியில் துணைத்தலைமையாசிரியராகப் பணியாற்றினார். அங்கு இருந்தபோது பண்டித குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயின்றார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.



தமிழ்மொழியானது இந்துக்களுக்கு மட்டும் உரியதன்று. அது சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என அனைத்து மதத்தவர்களுக்கும் உரிய தனித்துவமான மொழி என்று உலகம் முழுவதும் இதன் சிறப்பை எடுத்துரைத்தவர் அடிகளார்.

1961 இல் மலேசியா சென்று மலாயா பல்கலைக்கழகத்தில் 1969 வரை இந்தியக் கல்வியாய்வுகள் துறையிலே தலைமைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அங்கிருந்து ஓய்வு பெற்றபின் ஓராண்டு காலம் பாரிசில் பிரான்சுக் கல்லூரியிலும், ஓராண்டு காலம் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

Tamil Culture என்ற ஆங்கில காலாண்டிதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951_1959 வரை இருந்தார். அதன் மூலம் அகில உலகத்திலுமுள்ள தமிழ், திராவிட ஆர்வலரை ஒன்று சேர்க்க முற்பட்டு பெரும் வெற்றியும் கண்டார். 1961 இல் சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (Academy of Tamil Culture) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களும் எழுதி வெளியிட்டார். தமிழ்த் தூது என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதினார்.

மலேசியாவில் பணி புரியும் காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றுநர்களில் ஒருவராக இருந்து செயற்பட்டார். அதன் முதல்

நாளை 42 ஆவது நினைவு தினம்

மாநாட்டினை 1966, ஏப்ரல் 16 – 23 திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரமாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். பின்னர் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்னர் ஏப்ரல் 1980 இல் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மே மாதம் வேலணையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் எழுதிய தமிழ் மறை விருந்து நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். அதன்பின், பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார், 1980 செப்டம்பர் 1 ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் காலமானார்.

தனிநாயகம் அடிகளாரின் பெயரைக் கேட்கின்றபோதெல்லாம் எமக்கு நினைவில் வருவது தமிழ்க்கலாசாரம் என்னும் முத்திங்கள் ஏடும், 1968ம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழ் ஆராய்ச்சி மாநாடுமே என்பதில் ஐயமில்லை. தமிழ்க் கலாசாரம் என்னும் தீன் சுவையை அந்நிய மொழியாகிய ஆங்கில மொழிமூலம் தமிழர்களது கலை இலக்கியம் பண்பாடு என்பவற்றை உலகிற்கு அவர் பறை சாற்றி வந்துள்ளார்.

இவ்வேடு உலகை வலம் வரச் செய்த பெருமை தனிநாயகம் அடிகளாரையே சாரும். கத்தோலிக்க துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் காலப்போக்கில் தமிழ் மீது தீராக் காதல் கொண்டு அதனை முறைப்படி கற்றுத் தேர்ந்து ஒரு தமிழ் வளர்க்கும் பரப்பும் தூதராகவும் தமிழ்க் கலாசாரம் ஏட்டின் ஆசிரியராகவும் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்மொழி இந்துக்களுக்கு மட்டும் உரிய தன்று. அது சமணர், பௌத்தர், இஸ்லாமியர், கிறிஸ்தவர் என அனைத்து மதத்தவர்களுக்கும் உரிய தனித்துவமான மொழி என்று உலகம் முழுவதும் இதன் சிறப்பை தனிநாயகம் அவர்கள் எடுத்துரைத்தார்.

1966 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டின் பிரதம அதிதியாக வண தனிநாயகம் அடிகளார் கலந்து கொண்டமை இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு பெருமையைத் தோற்றுவித்தது. அவ்வரங்கில் அடிகளார் சுறுசுறுப்பாகவும் விவேகமாகவும் செயற்பட்டு மாநாட்டின் முன்னோடியாகவும் திகழ்ந்தமையைப் பல வட்டாரங்களிலிருந்து கிடைத்த புகழாரங்கள் சான்று பகரும்.

தனிநாயகம் அடிகளார் ஓர் அறிவாளி, ஆன்மீகவாதி. அத்துடன் ஒரு செயல் வீரன். உலகில் உள்ள தமிழர்களை, தமிழறிஞர்களை ஒன்று இணைத்தவர். அவர் தமிழர்களின் மனதில் பதிந்துள்ள அழியாச் நினைவுச்சின்னம் என்றே கூறலாம்.



கலாநிதி
நல்லையா குமரகுருபரன்...

வெளிநாட்டில் தொழில்புரியும் பணிப்பெண்கள் நலனுக்காக புதியதொரு காப்புறுதி திட்டம்

பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனம், வெளிநாட்டிற்குச் செல்லும் வீட்டு பணிப்பெண்களுக்கான புதிய காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வை கடந்த 09 ஆம் திகதி கொழும்பு சினமன் லேக்சைட்டில் ஏற்பாடு செய்திருந்தது.

எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்காற்றும் வெளிநாட்டில் தொழில்புரியும் வீட்டுப் பணிப்பெண்கள் எதிர்நோக்கும் திடீர் சம்பவங்களின் போது, அவர்களை பொருளாதார ரீதியாக வலுவடையச் செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்ட இக்காப்புறுதி திட்டம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் இசுறு பாலபடபெந்தி ஆகியோரின் தலைமையில் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜீவனி காரியவசம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.பீ.ஏ விமலவீர, இலங்கை வெளிநாட்டு சேவைகள் பணியகத்தின் தலைவர் மகேந்திர குமரசிங்க, அதன் உபதலைவர் ஹில்மி அஸீஸ், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் சுராஜ் தன்தெனிய, உத்தரவாதம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவன சங்கத்தின் (ALFEA) தலைவர் பாரூஸ் மரிக்கார், செயலாளர் எம். எப்.எம் அர்ஸாட் மற்றும் பொருளாளர் சமன் நாக மற்றும் ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

அமைச்சர் மனுஷ நாணயக்கார, பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் இசுறு பாலபடபெந்தி ஆகியோர் தலைமையில் அறிமுகம்



அமைச்சர் மனுஷ நாணயக்காரGreenway வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தைச் சேர்ந்த ஷாந்த ஜயசுந்தரவிடம் காப்புறுதி ஒப்பந்தத்தை கையளித்த போது எடுக்கப்பட்ட படம். இடமிருந்து வலமாக ALFEA நிறுவனத்தின் செயலாளர் எம்.எப்.எம் அர்ஸாட், இலங்கை வெளிநாட்டு சேவைகள் பணியகத்தின் தலைவர் மகேந்திர குமரசிங்க, ALFEA சங்கத்தின் தலைவர் பாரூஸ் மரிக்கார், பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இசுறு பாலபடபெந்தி, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் சுராஜ் தன்தெனிய, பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜீவனி காரியவசம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

சேவைகள் பணியகத்தின் தலைவர் மகேந்திர குமரசிங்க, அதன் உபதலைவர் ஹில்மி அஸீஸ், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்தின் தலைவர் சுராஜ் தன்தெனிய, உத்தரவாதம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவன சங்கத்தின் (ALFEA) தலைவர் பாரூஸ் மரிக்கார், செயலாளர் எம். எப்.எம் அர்ஸாட் மற்றும் பொருளாளர் சமன் நாக மற்றும் ஊடகவியலாளர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

இந்த விஷேட காப்புறுதி திட்டத்தின் கீழ் பணியாளர்கள் இடைவிலகல் (Run Away), பணியாளர்கள் பணியினை மேற்கொள்ள மறுப்பு தெரிவித்தல் (Refusal to work), மருத்துவ பரிசோதனையில் தகுதயின்மையினால் பணியாளர்களை சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்புதல் (Repatriation due to medically unfit), திடீர் விபத்து காரணமாக பணியாளர் மரணித்தல் (Accidented death), திடீர் விபத்து காரணமாக பணியாளர்கள் நிரந்தரமாக செயலற்று போதல் (Permanent total disablement due to accident), என்பன காப்புறுதிப்படுத்தப்படுகின்றன.

இது தொடர்பாக பீபல்ஸ் இன்ஷுவரன்ஸ் நிறுவனத்தின் தலைவர் இசுறு பாலபடபெந்தி பின்வருமாறு கருத்துரைத்தார்.

"அரச நிறுவனம் என்ற ரீதியில் எமது நாட்டு பொருளாதார வளர்ச்சிக்காக நாங்கள் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். எங்கள் நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெருமளவில் ஈட்டித் தரும் வீட்டுப் பணிப்பெண்கள் எதிர்கொள்ளும் இடர்களை குறைத்து கொள்ள நடவடிக்கை எடுப்பது எமது கடமையும் பொறுப்புமாகும் என்று நாங்கள் நம்புகின்றோம். ஆகவே, இப்பணியாளர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு அவர்களுக்கு தேவையான சலுகைகளை பெற்றுதருவதுதான் எமது நோக்கமாகும்.

இன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த வர்த்தகத் தொடர்பினை புதிய காப்புறுதி திட்டங்களை அறிமுகப்படுத்தி, சக்திவாய்ந்த ஒன்றாக முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும்."

அதேவேளை இத்திட்டத்தினை வெற்றிகரமாக நடைமுறைபடுத்த உதவிய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் ALFEA சங்கத்தின் அதிகாரிகள் என்போருக்கு விசேடமாக நன்றிகளையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

திருகோணமலை கல்வி வலயத்தின் தமிழ்மொழித் தின கொண்டாட்டம்

திருகோணமலை கல்வி வலயத்தின் அகில இலங்கை தமிழ் மொழித் தினம் _2022 நேற்று 30 ஆம் திகதி தி/தி/ பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் நடைபெற்றது.



இரு அமர்வுகளாக நடைபெற்ற இந்நிகழ்வில் ஆரம்ப கட்டமாக வலய மட்டத்தால் நடத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வலயக்கல்விப் பணிப்பாளரால் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஏனைய கலை, கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

குறித்த நிகழ்வின் இரண்டாம் கட்டமாக நேற்று நடைபெற்ற கலை, கலாசாரப் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கும் நிகழ்வில் பிரபல தமிழ்ப் பேச்சாளர் திருமதி திலகவதி ஹரிதாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவற்றை வழங்கி வைத்தார். மேற்படி நிகழ்விற்கு வலயக்கல்வி அலுவலக பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் வலயத்தின் கீழ் உள்ள மூன்று கல்விக் கோட்டங்களிலும் உள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பா.விபூஷிதன்...

22 வருடகால ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெறும் நல்லாசான் அஹமட் சாகிர்

ஆசிரியர் எம்.ஏ.சி. அஹமட் சாகிர் 22 ஆண்டுகள் பணியில் இருந்து கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார். அட்டாளைச்சேனையில் அப்துல் காதர்_ உம்மு சல்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் இவர்.

தனது ஆரம்பக் கல்வியை அட்டாளைச்சேனை அல்முனீறா கலவன் பாடசாலையில் (தற்போதைய அல்முனீறா பெண்கள் உயர் பாடசாலை) கற்று, பின்னர் உயர்தரக் கல்வியை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் தொடர்ந்த இவர் 1998இல் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி முதன்மை மாணவனாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். அந்த காலகட்டத்தில் அவர் கல்வி கற்ற அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை நிருவாகத்தின் வேண்டுகோளை ஏற்று தொண்டர் ஆசிரியராகவும் அங்கு கடமையாற்றினார்.

2000.07.19ஆம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்று ஒலுவில் அல்ஹம்றா மகாவித்தியாலயத்தில் கணித ஆசிரியராக தன் பணியை ஆரம்பித்து பின்னர் ஆசிரிய வாண்மை விருத்திக்காக அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவாகினார். இவர் 2003_ 2009 வரையான காலப்பகுதியில் அல்முனீறா பெண்கள் உயர் பாடசாலையில் கல்விப் பணி செய்தது மட்டுமன்றி கணித, விஞ்ஞான போட்டிகளில் அதிகளவான மாணவர்களை பங்கேற்க செய்தார்.

2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி பட்டத்தையும் 2009 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பயிற்சியையும் சிறப்பாக நிறைவு செய்தார். தொண்டராசிரியராக ஆரம்பித்து பட்டதாரி ஆசிரியராகும் வரை கல்விக்கு உரம் சேர்த்திருக்கிறார்.



இருமொழி கற்கையை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான கணிதப்பாடத்தை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை, அல்முனீறா பெண்கள் உயர் கல்லூரி, அறபா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் கற்பித்து மாணவர்கள் மத்தியில் உயர்நிலை பெற்றார்.

அப்துல் ரஷீத் பாத்திமா றஸா என்பவரை 2005 ஆம் ஆண்டில் மணந்து கொண்ட இவர் நான்கு பிள்ளைகளுக்கு தகப்பனாரார். இவருடைய சகோதரர்களில் இருவர் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளாவர். ஒருவர் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஆவார். மற்றொருவர் இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றுகின்றார்.

இவர் மார்க்க விடயங்களிலும் கணிசமாக செலுத்தி வந்ததனை சமூகம் நன்கறியும். தப்லீக் ஜமாத் நடவடிக்கைகளில் தன்னை அர்ப்பணித்ததோடு மார்க்க உபன்நியாச நிகழ்வுகளையும் மேற்கொள்ளக் கூடிய மார்க்க அழைப்பாளராகவும் செயற்பட்டதன் விளைவாக அல்அர்ஹம் வித்தியாயலத்தில் இவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட 'இன்றைய நாள் சிந்தனை' எனும் செயற்திட்டம் உயிரோட்டமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்காக பாடசாலை சமூகத்தின் வரவேற்பையும் பெற்றுள்ளார்.

எம்.எஸ்.எம்.றிஸ்வான்...
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

செலவினங்களை குறைப்பதே இந்த பட்ஜட்டின் நோக்கம்

வற் வரியின் அதிகரிப்பு மக்களை பாதிக்கும்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப் பட்ட இந்த வரவு செலவுத்திட்ட மானது செலவினங்களை குறைப் பதே நோக்கமாக கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் தெரி வித்தார்.

அத்துடன் வற் வரி அதிகரிப்பு அனைத்து தரப்பினரையும் பாதிக்கும் என்பதுடன், மக்க ளுக்காக அறிவிக்கப்பட்ட நிவாரணங்களும் இந்த வரி அதிகரிப்பினூடாக கிடைக்காது போகலாமென்றும் கூட்டமைப்பின் பேச்சா ளர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

வரவு செலவுத் திட்டத்தில் வற் வரி 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இதனால் வழங்கப்படும் சலு கைகள் இந்த வரி அதிகரிப்பின் ஊடாக இல்லாமல் போய்விடும்.

இது நேரடியான வரி அல்ல என் பதனால் அனைவருக்கும் பொது வானதாகவே இருக்கும். ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு இதில் இல்லை. அதன்படி வறுமை நிலைமையில் உள்ளவர் களுக்கு இதில் சலுகை கிடைக்கப் போவ தில்லை.

அதேவேளை செலவினங்களை குறைப் பதே இந்த வரவு செலவுத் திட்டத்தின் நோக் கமாக உள்ளது.ஆனால் பாதுகாப்பு செலவி னம் இதில் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த வரவு செலவுத் திட்டத்தை விடவும் அது அதி கரிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறைக்கப் பட வேண்டிய முக்கியமான செலவினங்கள் குறைக்கப்படவில்லை.

குறிப்பாக அனைவரையும் பாதிக் கும் மறைமுக வரிகள் அதிகரித்துள்ளன. இதனால் மக்களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்கவில்லை. வேறு நிவாரணங்கள் அறி விக்கப்பட்டிருந்தாலும் வரி அதிகரிப்பால் அந்த நிவாரணங்களும் கிடைக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிக வருமானம் பெறுவோர் அதிக வரி செலுத்தும் முறை அவசியம்

இடைக்கால பட்ஜட் குறித்து ஹர்ஷ டி சில்வா

லோரன்ஸ் செல்வநாயகம்

அதிக வருமானத்தை பெற்றுக் கொள்பவர் கள் தொடர்பில் அதிகரித்த வரி அறவிடும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வரிக்கொள்கையால் குறைந்த வருமானம் பெறும் மக்களே பெரும் பாதிப்பை எதிர்நோக்க நேரும் என குறிப்பிட்ட அவர், அதிக வருமானம் பெறு பவர்களுக்கு அதிக வரி அறவிடும் வகையில் வரிக்கொள்கையில் திருத்தம் மேற்கொள் ளப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப் பட்ட இடைக்கால வரவு செலவு திட்டம் குறித்து பாராளுமன்ற கட்டிடத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெ ழுப்புவதற்கு நீண்டகாலத்துக்கு முன்னரே மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட் டத்தை தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க இடைக்கால வரவு செலவு திட்ட யோசனையாக முன் வைத்து ள்ளார்.



நாம் முன்வைத்துள்ள பல விட யங்கள் இதில் உள்ளடக்கப்பட் டுள்ளன. குறிப்பாக பொதுஜன பெரமுன கட்சி எதிர்ப்பு தெரி வித்த விடயங்களே நூற்றுக்கு 80 வீதமாக இதில் காணப்படுகி றது. அதனால் இதனை எவ்வாறு செயல்படுத்த முடியும் என்பதே பிரச்சினை யாக உள்ளது.

ஜனாதிபதி அறிவித்துள்ள பொருளாதார மறுசீரமைப்புக்கு நாம் இணக்கம் தெரிவிக் கின்றோம். பொருளாதார பிரச்சினைக்கு தீர்வுகாண தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாமே ஆரம்பத்திலி ருந்து கூறி வருகின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லு மாறு 2020இல் நாம் தெரிவித்திருந்தோம். ஆனால் தமது சடலங்களுக்கு மேலாகவே செல்லவேண்டிவரும் என பொதுஜன பெரமுன கட்சியினர் தெரிவித்து வந்தனர். அதனால்தான் நாடு தற்போது அதல பாதா ளத்துக்கு சென்றுள்ளது. எனினும் தற்போது இந்த வரவு செலவு திட் டத்துக்கு ஆதரவளிக்கவேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டி ருக்கின்றனர்.

ஜனாதிபதி முன்வைத்துள்ள வரிக்கொள்கையில் எமக்கு பூரண மாக இணங்க முடியாது. வற் வரி 12வீதத்தில் இருந்து 15வீதமாக அதி கரிக்கப்பட்டிருக்கின்றது.

அதேநேரம் வருமான வரியாக நூற்றுக்கு இரண்டரை வீத வரி அறவிடுவதற்கும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வரி நூற்றுக்கு 20வரை அதிகரிக் கப்படுகின்றது. இந்த வரியால் குறைந்த வருமானம் பெறுபர்கள் அதிகம் பாதிக்கப் படுவார்கள்.

அதிக இலாபம் பெறுபவர்களிடம் அதிக வரி அறவிடும் வகையில் வரி திருத்தம் மேற்கொள்ளப்படும். என்றே நாம் எதிர் பார்த்தாமே். அதனால் இந்த வரிகொள்கை தொடர்பில் எமக்கு திருப்தியடைய முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித் தார்.

சகல கட்சி... 03ஆம் பக்கத் தொடர்

இந்த கருத்துக்களுடன் விரிவுபடுத்தப்பட்ட புதிய நகல் சட்டமூலம் பிரதமர் தலைமையில் எதிர்வரும் வெள் ளிக்கிழமை இடம்பெறும் கட்சித்தலைவர்களின் கூட் டத்தின் போது முன்வைக்கப்படும். 17 துறைசார் கண் காணிப்பு நிறைவேற்று குழுக்களையும் தற்போதுள்ள 12 நிலையியல் நிறைவேற்று குழுக்களுடன் மேலும் மூன்று குழுக்களை அமைப்பது தொடர்பிலும் அர சாங்கம் யோசனை முன்வைத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் கட்சிகள், தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசிய கட்சி, ஈபிடிபி, தேசிய காங்கிரஸ் ஆகியகட்சிகளின் தலைவர்கள் பங் கேற்றனர்.

மீண்டும் அமைச்சர்... 03ஆம் பக்கத் தொடர்

அமைச்சர்கள் பல மாதங்கள் செய்து முடிக்கும் பணிகளை தாம் வெறும் 10 நாட் களில் செய்து முடித்ததாகவும் தெரிவித் துள்ளார். மேலும் பொருளாதார நெருக் கடியிலிருந்து நாட்டை மீட்கும் திட்டம் தம்மிடம் உள்ளதாகவும் தலைகளை மாற் றுவதால் எந்த பயனும் இல்லை என்றும் நல்ல தலைவர்கள் அப்படி செய்யமாட் டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

கோட்டாவின் அமைச்சரவையில் பத வியேற்ற தம்மிக்க பெரேரா கடந்த காலங் களில் தற்போதைய ஜனாதிபதி ரணிலை கடுமையாக விமர்சித்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஜனாதிபதியினால்... 03ஆம் பக்கத் தொடர்

ரூபாவினால் அதிகரிக்கிறது. 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரி வின்4வது உபவிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள "இரண் டாயிரத்து அறுநூற்றி இருபத்து மூன்று மில்லியன் நானூற்று நாற்பத்து இரண்டாயிரம் ரூபாவாகவி ருத்தல்" எனும்சொல்லுக்குப் பதிலாக "இரண்டா யிரத்து தொள்ளாயிரத்து ஒரு பில்லியன் நூற்றி இருபத்திமூன்று மில்லியன் நானூற்று நாற்பத்தி ரெண்டாயிரம் ரூபாவாகவிருத்தல்"எனும் சொல் இடப்படும். திருத்தத்தின் விளைவாக இந்த 4வது உப பிரிவின் திருத்தத்துடன் 2022 நிதியாண்டுக்குள் சேவைக்காக திரட்டு நிதியத்தின் மீது விதிக்கப்படு வதற்கு சட்டங்களினால் அதிகாரமளிக்கப்பட்ட அரசாங்கத்தின் மதிப்பீடுசெய்யப்பட்ட செலவி னத் தொகை 2,623 பில்லியன் ரூபாவிலிருந்து 2,901 பில்லியன் ரூபாவரை அதிகரிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒதுக்கீட்டுச் சட்ட திருத்தத்தின் மீதான விவாதம் இன்றும் நாளையும் நாளை மறுதினம் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம், நவகத்தேகம பகுதியில்

மின்சார வேலியில் சிக்கி காட்டு யானை பலி

வன்னாத்திவில்லு குறூப் நிருபர்



நவகத்தேகம பிரதேச செயலகத் திற்குற்பட்ட தம்மன்னாவெட்டிய கிராமத்தில் காட்டு யானையொன்று நேற்று (30) அதிகாலை மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள் ளது.

இந்தக் காட்டு யானை கிராமத்திலேயே பல நாட்களாக அங்குமிங்கும் சுற்றித்திரிந் ததாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இக்காட்டு யானை 25 வயது மதிக்கத் தக்கதென வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வீடொன்றிலிருந்து அதிவலு கொண்ட மின்சாரத்தைப் பெற்று யானைவேலியில் பொருத்தியமையின் காரணத்தினாலேயே யானை உயிரிழந்துள்ளதாகவும் திணைக் கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்போது வீட்டின் உரிமையாளர் இரண்டு வருடங்களுக்கு முன்னரே உயிரி ழந்துவிட்டதாகவும் அவரது தாயார் இந்த வீட்டிலேயே வசித்து வந்துள்ளதாகவும் இவ்வாறு யானைவேலிக்கு அதிவலு கொண்ட மின்சாரம் பொருத்தப்பட்டிருப் பது தொடர்பில் தனக்கு தெரியாதெனவும் 75 வயதுடைய தாயார் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நவகத்தேகம பொலிஸார் மற்றும் நவகத்தேகம வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இனைந்து நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

அமெரிக்க ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நெஷனல் நிறுவனத்தால் இலங்கைக்கு 08 மில்.அமெ.டொலர்



அமெரிக்காவிலுள்ள புகழ்பெற்ற உலகளாவிய மனிதாபிமான அமைப்பான ஹார்ட் டு ஹார்ட் இன்டர் நெஷனல், நிறுவனம் இலங் கையின் சுகாதார அமைச்சு மற்றும் வொஷிங்டன் டி.சி. யிலுள்ள இலங்கைத் தூதர கம் ஆகியவற்றின் ஒருங்கி ணைப்பில், இரண்டாவது நன்கொடையானது கொழும் புக்கு ஐந்து தனித்தனி விமானங்களின் மூலம் அனுப்பிவைக்கவுள்ளது. கடந்த மாதம் 9,08,547 அமெரிக்க டொலர் பெறு மதியான மருத்துவப் பொருட்களை இலங் கைக்கு வழங்கியது. இது கடந்த ஜூலை 13ஆம் திகதி கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் அதிகாரிகளால் மேலதிக விநி யோகத்துக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்கவின் வழிகாட்டலின் கீழ், ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நெஷனல், இலங்கை மக்களுக்கு சுமார் 82,22,898.78 அமெரிக்க டொலர் (இலங்கை நாணயப்படி 304,20,61,403) பெறுமதியான அவசர மருத் துவ உதவிக்கான இரண்டாவது தொகைக்கு தேவையான அனைத்து அரசாங்க அனுமதி களையும் பெற்றுள்ளது.

இந்த நன்கொடையில் இலங்கையில் பற்றாக்குறையாகவுள்ள மற்றும் அவசர மாகத் தேவைப்படும் அமொக்ஸிசிலின், பொட்டாசியம் குளோரைட்டு, பென்சிலின் மற்றும் வென்லாஃபாக்சின் போன்ற முக்கிய மான வலி நிவாரணிகள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப் பிகளின் விரிவான அளவு உள்ளடங் கும். இதுவரை, ஹார்ட் டு ஹார்ட் இன்டர் நெஷனல், இலங்கைக்கு அவசர மருத்துவ உதவியாக 91,31,445. அமெரிக்க டொலர் (அதாவது, ரூபா. 3,378,178,366) மொத்த பங்களிப்பைச் செய்துள்ளது.

ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நெஷனலின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிம் கரோல் உடன் (20) நடைபெற்ற சந்திப்பின் போது, இந்த நெருக்கடியான நிலையில் இலங்கை மக்களுக்கு தாராளமாக வழங்கிய நன்கொ டைகளுக்காக ஹார்ட் டு ஹார்ட் இன்டர் நெஷனலுக்கு தூதுவர் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார்.

முதல் நன்கொடையைப் போலவே, அனைத்து செலவுகளும் ஹார்ட் டு ஹார்ட் இன்டர்நெஷனல் நிறுவனத்தால் ஏற்கப் படவுள்ள அதேவேளை, சுகாதார அமைச்சு நன்கொடையை இலங்கை மக்களுக்கு எந்தக் கட்டணமுமின்றி உடனடியாக விநி யோகிக்கும்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் முக்கியமான விடயங்கள்...

- பற்றாக்குறை ஏற்படாதவாறு எதிர்காலத்திலும் தேவையான சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை.
- இரண்டு ஹெக்ரேயர் அல்லது அதற்குக் குறைந்தளவு நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு, விவசாயக் கடனை (31.05.2022 வரை) மீளச் செலுத்த முடியாத சுமார் 28,259 விவசாயிகளுக்கு கடன் சலுகை.
- மரக்கறி, பழங்கள், பூக்கள் மற்றும் தேயிலை உற்பத்திகளை கொழும்புக் குக் கொண்டுவர சரக்கு ரயில் சேவையை மேம்படுத்த நடவடிக்கை. ஆரம்ப கட்டமாக, ஹாலி எல கொழும்பு கோட்டை சேவை ஆரம்பிக்கத் திட்டம்.
- ரயில்வே துறையின் தரம் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுக் காக தனியார் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை.
- எரிபொருள் பாவனையைக் குறைப்பதற்காக மின்சார துவிச்சக்கர வண்டிகளை உள்நாட்டில் தயாரிப்பதற்கு ஊக்குவிப்பு.
- 2022 செப்டம்பர் 01ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும் வகையில், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 12 சதவீதத்திலிருந்து 15 சத வீதம் வரை அதிகரிப்பு.
- பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் உள்ளிட்ட வெளிநாட்டு மாணவர் களை ஈர்க்கும் வகையில் உயர் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக தனியார் முதலீட்டை ஊக்கவிக்க ஆலோசனை.
- இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவு (ஒதுக்கீட்டுச் சட்டமூலம்) மீதான விவாதம் இன்று (31) நாளை (1) மற்றும் நாளை மறுதினம் (2) நடை பெறவுள்ளது.
- வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை மறுதினம் (2) வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

மோசமானதொரு பொருளாதார நெருக்கடியில் சிறந்த பட்ஜட்

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாடு மிக மோசமான பொருளா தார நிலையை எதிர்நோக்கியுள்ள நிலையில் முன்வைக்கப்பட்டுள்ள சிறந்த வரவு செலவுத் திட்டமாக இதனை பார்க்க முடிகிறது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரி வித்தார்.

இடைக்கால வரவு செலவு குறித்து அவர் மேலும தெரிவிக்கையில்,

வரலாற்றில் நாடு பெற்றுக் கொண்ட கடனை மீள செலுத்த முடியாத நிலை உள்ள போதும் கடன்களை மறு சீரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங் கம் முன்னெடுத்து வரும் நிலையில் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையிலான வரவு செலவு திட்டமாக இதனைக் குறிப் பிட முடியும். பொருளாதார நெருக் கடிக்குள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல், பொரு



ளாதாரம், நிதி முகாமைத் துவம் போன்றவற்றை முறைப்படுத்துகின்ற சிறந்த கொள்கையுடனான திட் டங்களைக் கொண்ட வரவு செலவுத் திட்டம் இது.

அந்த வகையில் இதன் மூலம் சட்டங்கள் பல திருத் தம் செய்யப்படுகின்றன. அரசு நிதி தொடர்பான பொறுப்புக் கூறும் சட்டமும் திருத்தப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

IMF மூலமான உதவிகளுக்கு...

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங் களுக்கு நிதியுதவி, விவசாயிகளுக் கான உரம் மற்றும் விதைகள், கல்வி பரிமாற்றம் மற்றும் பொது நிதி நிர் வாகத்தை வலுப்படுத்துவதற்கான பயிற்சி போன்ற தொடர்ச்சியான முயற்சிகள் மூலம் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான முயற்சிகளை அமெரிக்கா இரட்டிப்பாக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள இலங்கைஅ மெரிக்க வர்த்தக சபையில் இடம் பெற்ற நிகழ்வில் அவர் இந்த கருத் துக்களை தெரிவித்தார்.

அமெரிக்க இலங்கை இருதரப்பு வர்த்தகம் மூலம் ஏற்கனவே 180,000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஏற்றுமதி மூலம் இலங்கை பொரு ளாதாரத்திற்கு பில்லியன்களை பங் களிக்கின்றனர் என்று அவர் கூறியுள் ளார்.

61,000 குடும்பங்களுக்கு.....

இத் திட்டங்கள் அனைத்தையும் நான்கு மாதங்களுக்குள் செயற்படுத் துவதற்கு 46,600 மில்லின் ரூபாவை ஒதுக்கீடு செய்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடைக் கால வரவு செலவு திட்டத்தை சமர்ப் பித்து உரையாற்றும் போதே நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

கர்ப்பிணித் தாய்மாருக்கு தற்பொ ழுது வழங்கப்படும் 20,000 ரூபா வுக்கு மேலதிகமாக மேலும் 2,500 ரூபாவை மாதாந்த மேலதிக கொடுப் பனவாக வழங்குவதற்கும் தான் முன்மொழிவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது வரவு செலவு திட்ட உரையின் போது மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பொருளாதார உபாய மொன்றை உருவாக்கும் படிக் கல்லாக 2022ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க பாராளுமன்றத்தில் சமர்ப்பித் தார். இதுவரை காணப்பட்ட பொரு ளாதார போக்கை மாற்றியமைக்கும் அடித்தளமாக இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டம் அமையும் என்று ஜனாதிபதி இதன்போது தெரி வித்தார்.

நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை விவகார அமைச்சர் என்ற வகையில் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (30) பிற்பகல் இந்த இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை பாராளு மன்றத்தில் சமர்ப்பித்தார்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தினை சமர்ப்பித்து உரை யாற்றிய ஜனாதிபதி, அனைவ ரும் ஒன்றிணைந்து செயற்படாத வரை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை வெற் றிகொள்ள முடியாது என்று குறிப் பிட்டார். இந்த நெருக்கடியை வெற்றிகொள்வது அனைவரதும் பொறுப்பு என்ற வகையில் பாரா ளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளையும், சர்வக் கட்சி அர சாங்கத்தில் இணைந்துகொள்ளுமா றும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்கள் மீண்டும் அழைப்பு விடுத்தார். தனிப்பட்ட அரசியல் இலக்குகளை புறந்தள்ளிவிட்டு நாட்டினையும் தேசத்தையும் மீளக் கட்டியெழுப்பும் பணியில் அனைவ ரையும் இணைந்துகொள்ளுமாறும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத் தார்.

இச்சந்தர்ப்பத்தை தவறவிட்டால் நாம் உலகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவோம் என்றும் ஜனாதி பதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

மலைச்சாரலி

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் 109வது ஜனன தின நிகழ்வு









மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் 109வது ஜனன தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தில் உள்ள ஐயாவின் உருவச் சிலைக்கு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி,தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.மற்றும் இ. தொ.காவின் முக்கியஸ்தர்கள் பலரும் மலர் மாலை அணிவித்தனர்.

மாத்தளை மாநகர சபை;

இர்பான் அலிக்கு பதிலாக மொஹமட் சலீம்தீன் நியமனம்

உக்குவளை விசேட நிருபர்

மாத்தளை மாநகர சபையில் பதவி நீக்கப்பட்ட மாத்தளை மாநகர சபை உறுப்பினர் இர்பான் அலிக்கு பதிலாக மாத்தளை மாநகர சபையின் புதிய உறுப்பினராக யாசின் மொஹமட் சலீம்தீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாத்தளை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளரான யாசின் மொஹமட் சலீம்தீன், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மாத்தளை மாவட்ட பிரதான அமைப்பாளரும் சட்டத்தரணியும் முன்னாள் பிரதி அமைச்சருமான லக்ஷ்மன் வசந்த பெரேரா முன்னிலையில் மாத்தளை கிரேன் மவுன்டன் ஹோட்டலில் பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

நிகழ்வில் மாத்தளை மாநகர முதல்வர் சந்தனம் பிரகாஷும் கலந்து கொண்டார்.

பேராதனை பல்கலைகழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா

எம்.ஏ.அமீனுல்லா,அக்குறணை குறூப் நிருபர்





பேராதனை பல்கலைகழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்றது. பேராதனை பல்கலைகழகத்தின் வேந்தர் பேராசிரியர் ஜெரல்ட் பீரிஸ் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் உபவேந்தர் பேராசிரியர் எம்.டீ .லமாவங்ச உட்பட பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர். 2020ஆம் ஆண்டிற்கான மேற்படி பட்டமளிப்பு விழா இரு தினங்களுக்கு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.இதில் மொத்தம் 3000 ற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தமக்குரிய பட்டங்களை பெற்றுக்கொள்ள உள்ளனர். பொறியியல், வைத்தியம் பல்வைத்தியம் மிருக வைத்தியம், விவசாயம். இணைந்த சுகாதார கற்கைகள், கலை, வர்த்தக முகாமைத்துவம் உட்பட பல்வேறு பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் தமது பட்டங்களை பெற்றுக் கொள்ள உள்ளனர்.

பாமஸ்டன் தோட்டத்திற்கு

தனியார் பஸ் சேவை ஆரம்பம்

தலவாக்கலை குறூப் நிருபர்

சங்கராஜா நினைவு அறக்கட்டளை ஊடாக தலவாக்கலை நகரிலிருந்து பாமஸ்டன் தோட்டத்திற்கு தனியார் பேருந்து சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 250 குடும்பங்கள் வாழும் பாமஸ்டன் தோட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர தொழில் துறைகளுக்கு செல்லும் மக்களின் நலன் கருதி இந்த தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என பிரதேச மக்கள் சங்கராஜா நினைவு அறக்கட்டளைக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.





கண்டி, கட/ரம்புக்கெல முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தேசமான்ய எ.டபிள்யு.எம். நளீம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர் திருமதி பஸ்லியா தாஹா கலந்து கொண்டார்.



ஹாலி எல ஸ்ரீ வீரசக்தி விநாயகப்பெருமான் ஆலய வருடாந்தர அலங்கார உற்சவம், நேற்று அலங்கார மூஷிக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இந்நிகழ்வில் வசந்த மண்டப பூஜைகள் இடம்பெறுவதையும், வழிபாடுகள் இடம்பெறுவதையும், அலங்கார மூஷிக கொடியேற்ற நிகழ்வு இடம்பெறுவதையும் சுவாமி உள்வீதி வலம் வருவதையும், பூஜை நிகழ்வுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படம்: பதுளை தினகரன் விசேட நிருபர்)





பதுளை, தெய்யனவெல ரயிலில் பாய்ந்த நபர் மரணம்

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை, தெய்யனவெல பகுதியில் ரயில் முன் பாய்ந்து 50 வயது மதிக்கத்தக்க நபரொருவர் நேற்று தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பதுளையிலிருந்து நேற்றுக் காலை கொழும்பு நோக்கி புறப்பட்ட ரயிலில், முன் பாய்ந்தே அவர் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குறித்த நபர் யாரென இன்னும் அடையாளம் காணப்படவில்லை. சடலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இறந்த நபர் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ள, பொலிசார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.













INTERNATIONAL DRIVING LICENCE

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON Estd. 1904

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

ஐஸ் போதை பொருள் வைத்திருந்தவர் கைது

கம்பளை நிருபர்

கம்பளை குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலஸ்பாகை அலுகொல்ல பிரதேசத்தில் வைத்து ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொலஸ்பாகை அலுகொல்ல பிரதேசத்தில் ஐஸ் போதைபொருள் வைத்திருந்த 29 வயதான சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்துள்ளனர். சந்தேகநபர் பல பிரதேசங்களில் பல குற்றங்களில் ஈடுபட்டவர் என தெரிய வருவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது,

சந்தேகநபர் இதற்கு முன்னரும் பல குற்றங்கள் செய்து வந்துள்ளனர். இதனால் மனைவியும் பிள்ளையும் விட்டுச் சென்றுள்ளனர்,

மேலும் சந்தேக நபரை நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தின் ஆஜர் செய்த போது 02.09.2022 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவுவிட்டுள்ளார்.

குறுந்துவத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித்த பண்டார வழிக்காட்டலுக்கு அமைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி S.I, புத்திவர்தன, மற்றும் 62716 உபதிஸ்ஸ , 83809 சதுரன், 99838 இந்திக்க தலைமையில் சுற்றிவளைப்பு இடம்பெற்றது,

மேலதிக விசாரணைகளை குருந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வலப்பனை மஹ ஊவா பிரதேசத்தில் தனியார் பஸ் ஒன்று நேற்று (30) வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 26 பேர் காயமடைந்த நிலையில் வலப்பனை மற்றும் ரிகலகஸ்கட வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

படங்கள்: தலவாக்கலை குறூப் நிருபர்

தினகரன்

வடக்கின் உதயம்

Vadakkin Uthayam

2022 ஓகஸ்ட் 31

புதன்கிழமை







அமரர் அருணாசலம் தங்கத்துரையின் நினைவுதினம்

திருமலை மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், சிறந்த மக்கள் சேவையாளன், அமரர்.அருணாசலம் தங்கத்துரையின் 25ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு உருவச் சிலை திறப்பு மற்றும் நினைவு நூல் வெளியீட்டு நிகழ்வுகள் கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வு கிளிவெட்டி மேம்பாட்டு ஒன்றியத்தின் ஒழுங்கு படுத்தலின் கீழ் பல்வேறுபட்ட புலம்பெயர் உறவுகள், எமது நாட்டைச்சேர்ந்த உறவுகளின் நிதி அனுசரணை ஒத்துழைப்புக் களுடனும் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமரருடைய உருவச்சிலையை (ஈழத்து காந்தி)தந்தை செல்வாவின் மகன் சட்டத்தரணி, நிறுவன ஸ்தாபகர் செ.சந்திரகாசன் திறந்துவைத்தார். மேலும் தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, மூதூர் பிரதேச சபைத் தலைவர் அரசியல் பிரமுகர்கள், உறவினர்கள் நண்பர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர் விஷேடமாக அமரரின் மகன் அகிலன் லண்டனிலிருந்தும், தம்பி குமாரதுரை குடும்பத்தினர் டென்மார்க் நாட்டிலிருந்தும் வருகைதந்து கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அமரரோடு 8 வருடங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் பணியாற்றிய முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் தங்க. முகுந்தனும் நிகழ்வில் பங்கு கொண்டார்.

யாழில். அரிசி மா கலந்து பாண் உற்பத்தி

கோதுமை மா தட்டுப்பாட்டை நீக்காவிடின் வெதுப்பகங்கள் மூடப்படும்

யாழ்.விசேட நிருபர்

கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக கோதுமை மாவுடன் அரிசி மாவை கலந்து பாண் உற்பத்தியில் யாழில் சில வெதுப்பகங்கள் ஈடுபட்டுள்ளதாக யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் சங்க தலைவர் க.குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

கோதுமை மாவின் விலை தற்போது அதிகரித்துள்ளது. அதனால் பாணின் விலையையும் அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நாடளாவியரீதியில் நேற்று வரை 2000ற்கு அதிகமான வெதுப்பகங்கள் மூடப்பட்டுள்ளன. நாட்டில் முட்டை விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கும் பாவனையாளர் அதிகார சபையினர், மாவின் விலைகள் தொடர்பிலோ, பதுக்கல்கள் தொடர்பிலோ கவனம் செலுத்தவில்லை.



யாழ்ப்பாணத்தில் தற்போது ஒரு கிலோ மா 360 ரூபாய்க்கு அதிக விலையில் விற்கப்படுகிறது.

அதனால் எதிர்வரும் நாட்களில் பாணின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலைமைக்கு நாங்கள் தள்ளப்படுவோம்.

பாணின் விலையை அதிகரிக்காது சிலர் பாணின் நிறையை குறைக்கக்கூடும். அதனால் முரண்பாடான நிலைமை ஏற்படும்.

தற்போது சிலர் கோதுமை மாவுடன் அரிசி மாவை கலந்து பாண் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். அது மக்கள் மத்தியில் வெற்றியளிக்கும் பட்சத்தில் தொடர்ந்து அரிசி மா கலந்து பாண் உற்பத்தியில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை பொறுத்த வரையில் எதிர்வரும் 15 நாட்களுக்குள் கோதுமை மா தட்டுப்பாட்டை நீக்குதல் , விலை குறைப்பு ஆகிய வற்றை உரிய தரப்புப்புகள் தலையிட்டு தீர்க்காவிட்டின் , வெதுப்பகங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

தங்க நகைகளுடன் இளைஞன் கைது

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பண்டாரிக்குளம், திருவள்ளுவர் வீதியிலுள்ள வீடொன்றில் கடந்த 22 ஆம் திகதி பிறந்த தின நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இதற்காக வங்கி பெட்டகத்தில் வைக்கப்பட்ட தங்கநகையினை வீட்டார் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பகல் வேளை தங்க நகையினை வீட்டில் வைத்து விட்டு வவுனியா நகருக்கு சென்று விட்டு வீட்டுக்கு திரும்பிய போது வீட்டின் பின்கதவு திறக்கப்பட்டு இருந்ததுடன், வீட்டு அலுமாரிகளும் திறக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து வீட்டு அலுமாரிகளை பார்வையிட்ட போது அதில் இருந்த பூட்டுகாப்பு, மோதிரம், தோடு, பென்ரன் உள்ளிட்ட 5 அரைப் பவுண் நகைகளை காணவில்லை. இதனையடுத்து வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் அஹமட், பொலிஸ் சார்ஜன்டுகளான திசநாயக்கா (37348), விக்கிரமசூரிய (36099), ஜயரத்ன (35436), திலீப் (61461), பொலிஸ் கொன்ஸ்டபிள்களான தயாளன் (91792), சந்தரூவான் (31043), ஹெடிஆராச்சி (99559) உள்ளடங்கிய பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனொருவன் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 9 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அடகு வைக்கப்பட்டிருந்த 5 அரைப் பவுண் நகையும் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் போது சந்தே நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்

யாழில் கவனயீர்ப்பு போராட்டம்



யாழ். விசேட நிருபர்

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு யாழில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் முன்பாக நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் யாழ்.பல்கலைகழக மாணவ பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

சீன தூதுவரின் டுவிட்டர் பதிவை மீளப் பெறுமாறு யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்.விசேட நிருபர்

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வு தொடர்பாக இலங்கைக்கு ஆதரவாக சீனத் தூதுவர் வெளியிட்டுள்ள டுவீட்டர் பதிவை மீளப் பெற வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகசந்திப்பிலேயே மாணவர் ஒன்றியம் இதனை வலியுறுத்தியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு யுத்தத்தின் போது தமிழர்கள் அனுபவித்த துன்பங்களை சீனா நன்கு அறிந்திருந்தது.

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்துவதன் மூலம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நீதியைப்



பெறுவதே எமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை.

நேற்றைய தினம்தான் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், சிவில் சமூகம், தொழிற்சங்கங்கள் மற்றும் நாம் கூட்டாக இணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்துமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் அனுப்பியிருந்தோம்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்குமாறு ஐ.நா மனித உரிமை ஆணையத்தை வலியுறுத்தும் கடிதத்தை தமிழர்கள் ஐக்கியமாக அனுப்பிய அதே நாளில், சீனத் தூதுவர் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக டுவிட்டில் பதிவிட்டுள்ளார்.

சீனத் தூதரகத்தின் குறித்த கருத்தானது இலங்கையில் தமது ஆதிக்கத்தை பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதனால்தமிழ் மக்கள் விரோத மனப்பான்மை கொண்டுள்ள சீனாவின் ஆதிக்கம் வடக்கு கிழக்கில் அதிகரித்து வருவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

ஆகவே இலங்கைக்கான சீன தூதரகம் தாங்கள் டுவிட்டரில் வெளியிட்ட உள்ளடக்கத்தை திரும்பப் பெறுமாறு சீனத் தூதரை நாங்கள் வலியுறுத்துவதுடன், மேலும் வரவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கும் எங்கள் அழைப்பை ஆதரிக்குமாறும் அவரை வலியுறுத்துகிறோம் என தெரிவித்தனர்.

வடக்கில் 5ஆம் திகதி வரை மழை பெய்யும் சாத்தியம்

யாழ்.விசேட நிருபர்

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் அவ்வப்போது பரவலாக, மிதமானது முதல் கனமானது வரை மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை பல இடங்களில் மழை பெய்துள்ளது. அந்நிலையில் அது தொடர்பில் நாகமுத்து பிரதீபராஜா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது கிடைத்து வரும் மழை எதிர்வரும் 05.09.2022 வரை தொடர வாய்ப்புள்ளது. வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள வளிமண்டல மேலடுக்கு சுழற்சியானது மிகப் பரந்த பரப்பில் செல்வாக்கு செலுத்துவதன் காரணமாக மழை கிடைக்கும் போது செறிவான மழை கிடைக்கும் என்பதுடன் இடிமின்னல் நிகழ்வுடன் கூடியதாகவே இம்மழை கிடைக்கும்.

அத்துடன் வளிமண்டல சுழற்சி அடுத்த சில தினங்களில் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளையும் உள்ளடக்கியே அரபிக்கடல் நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அவ்வப்போது பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை நீடிக்க வாய்ப்புள்ளது என்றுள்ளது.

செட்டிக்குளம்.ம.வித்தியாலயத்தில் உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 3 ஏ சித்தி



செட்டிகுள மண்ணின் மாணவி எந்தவித பகுதி நேர வகுப்புகளுக்கும் செல்லாமல் வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலயத்தில் டஸ்னா என்ற மாணவி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்.

வெளியான உயர்தரப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வவுனியா செட்டிக்குளம் மகா வித்தியாலய மாணவி டஸ்னா மூன்று ஏ சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இழுப்பைக்குளம் எனும் கிராமத்தில் வசித்து வரும் டஸ்னா அக்கிராமத்திலிருந்து நகரிலுள்ள செட்டிக்குளம் பாடசாலைக்கு சென்று கலைப் பிரிவில் மூன்று பாடங்களிலும் 3 ஏ சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் 08 ஆவது இடத்தினை பெற்றுள்ளார்.

செட்டிக்குளம் மகா வித்தியாலயத்தில் வரலாற்றில் முதல் தடவையாக உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 3ஏ சித்திகளை பெற்ற முதல் மாணவர் இவரே ஆவார்.

கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவு




புளியம்பொக்கனை கமநல சேவை நிலையத்தின் கறுக்காய்குளம் கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது இதில் தலைவர்த.தனகுலசிங்கம், செயலாளர் ந.சசிகரன், பொருளாளர் த.கவிச்சந்திரகுமார், உபதலைவர் இ.சிறீகந்தன், உபசெயலாளர் ப. நிருபன் இவர்களுடன் மேலதிகமாக 05 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இடைக்கால பட்ஜட் - 2022



2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துதல்



முன்னுரை

இதுவரை காணப்பட்ட பொருளாதார போக்கினை மாற்றியமைப்பதற்கான அடித்தளத்தினை இடுகின்ற இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினை நேற்று நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தோம். இன்றைய உலகத்துக்கேற்ற தேசிய பொருளாதார உபாயமொன்றினை உருவாக்குவதற்கான படிக்கல்லாக இது அமையும். ஒரு புதிய பொருளாதார கட்டமைப்பினை கட்டியெழுப்புவதற்கான அடித்தளமானது 2023 வரவுசெலவுத்திட்டத்துடன் ஆரம்பமாகும்.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்திற்கான முகவுரையான நான்கு விடயங்களை உங்களது கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன்.

பொருளாதார நெருக்கடி

பல்வேறு சந்தர்ப்பங்களில், தற்பொழுது நாம் எதிர்நோக்கி வருகின்ற பொருளாதார நெருக்கடியின் ஆழ அகலம் குறித்து நான் சுட்டிக் காட்டியுள்ளேன். இவ்வாறான மோசமான பொருளாதார வீழ்ச்சியொன்றினை அண்மைக்கால வரலாற்றில் நாம் சந்தித்ததில்லை. இந்நாட்டின் மக்களில் சிலர் இப் பிரச்சினைகளின் பாரதூரத்தினை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. கஷ்டங்கள் மற்றும் துன்பங்கள் பற்றி நாம் எடுத்துக் கூறியபோது அவர்கள் ஏளனம் செய்தனர். அவர்கள் நீர் கொதிக்கும்வரை பானையில் மகிழ்ச்சியில் நீந்தி விளையாடும் நண்டுகளைப் போன்றே நினைத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும் அவர்களில் பொறுப்புடன் சிந்திக்கின்றவர்களும் இருக்கின்றனர். அவர்கள் இந்த அழிவின் ஆழத்தினை அடையாளம் கண்டிருக்கின்றனர். இதனால் அவர்கள் எரிகின்ற தீயினை அணைப்பதற்கு முயல்வதுடன், அதற்காக அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்றனர்.

பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள்

நாடு சுதந்திரத்திற்குப் பின்னர் எழுபத்து நான்கு வருடங்கள் பின்னடைந்துள்ளது: என்பது இந்த நாட்களில் பொதுவாகக் கேட்கக்கூடிய பிரசித்தமான கோஷம் ஒன்றாகும். இந்த சுலோகங்களை இன்று கோஷிக்கின்றவர்கள், நாட்டினை அழித்தது காலனித்துவமாக்கல் என இதற்கு முன்னர் தொடர்ந்தும் கூறிவந்தவர்களாவர். இதுதான் கோஷங்களினால் வழிநடத்தப்படும் அரசியலின் யதார்த்தமாகும். அவர்கள் காலத்திற்குக் காலம் தேவைக்கேற்ப தமது சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரல்களை திருப்திப்படுத்துவதற்காக மாத்திரம் சுலோகமொன்றினை முன்வைத்தமை. எமது பொருளாதாரம் சிதைவடைவதற்கான பிரதான காரணம், பொதுவான கொள்கைகளின் கீழ் முன்னோக்கிச் செல்வதற்குப் பதிலாக அரசியல் கோஷங்களினால் வடிவமைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளை பின்பற்றியமையாகும்.

குறுகிய நோக்குடைய இப்பொருளாதாரக் கொள்கைகளின் காரணமாக, முன்னேற்றப் பாதையில் பயணித்த நாடானது காலத்திற்குக் காலம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. அவ்வாறான பல தடுமாற்றங்கள் மக்களின் தேர்வுக்கான கற்பிதங்களாக மாறின. மக்களின் அவற்றினை எவ்வித மீளாய்வுமின்றி கொள்கைகளாக ஏற்றுக் கொண்டனர்.

தேசிய மயமாக்கல் என்ற போர்வையில் அரசாங்கம் தொழில் முயற்சிகளை தாமாகவே தொழிற்படுத்துவதற்கு ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை, எமது நாட்டின் வரி வருமானத்தில் பெரும்பகுதி இத் தொழில் முயற்சிகளின் நட்டங்களை ஈடுசெய்வதற்கே பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் தேவைகளை நிறை வேற்றுவதற்காக ஒதுக்கீடு செய்யப்படவேண்டிய பணம் கம்பனிகளின் பெயரில் வீணடிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் செய்யவேண்டியது என்னவெனில், கொள்கைகளை உருவாக்கி அவற்றினைச் செயற்படுத்துவதேயாகும். இன்று அனைத்து விடயங்களும் அரசாங்கத்தினாலேயே செய்யப்படுகின்றது. மக்களும் அனைத்து விடயங்களையும் அரசாங்கத்திடமிருந்தே எதிர் பார்க்கின்றனர்.

அரச உடமை தொழில்முயற்சிகள் குறித்து மாத்திரமல்ல, வெளி நாட்டு முதலீடு தொடர்பான தகுந்த கொள்கைகளைக் கூட நாம் பின் பற்றவில்லை. காலம் முழுவதும் அத்தகைய வளங்களைப் பாதுகாத் தல் என்ற சாக்குப்போக்கின் கீழ் நாட்டின் வளப்பயன்பாடு உகந்த முறையில் இடம்பெறவில்லை என்பதே உண்மையாகும்.

பொருளாதார நெருக்கடியினைத் தீர்த்தல்

பொருளாதார நெருக்கடியினைத் தீர்ப்பதில் முக்கிய நடவடிக்கையொன்றாக எமது பாரம்பரிய அரசியல் சித்தாந்தங்களை தூக்கியெறிந்துவிட்டு அடிமட்ட மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளின் யதார்த்தங்கள் பற்றி புறநிலையாக சிந்தித்தல் வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் சுனில் ஹந்துன்நெத்தியினால் அண்மையில் தெரிவிக்கப்பட்ட கூற்றொன்றினை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். "அரசாங்கம் கொள்கைகளை உருவாக்குதல் வேண்டும். அரசாங்கம் தொழில் முயற்சிகளை செயற்படுத்தக்கூடாது."

இவ்விடயத்தில் புதிய உலக ஒழுங்கின் புதிய எண்ணக்கருக்கள் பற்றிய புதிய சிந்தனைகளை நாம் கொண்டிருப்போமாயின், பொருளாதார நெருக்கடியினைத் தீர்ப்பதற்கு எம்மால் முடியுமாகவிருக்கும்.

பொருளாதார நெருக்கடியினைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள்

ஒருவரை ஒருவர் விரல் நீட்டுவதன் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வினை எட்ட முடியாது. கடந்தகால நிகழ்வுகளை சபிப்பதன் மூலமும் அவற்றுக்கு தீர்வுகாண முடியாது. குறுகிய மற்றும் நீண்டகால திட்டங்களை பின்பற்றுவதனால் மாத்திரமே இந்நெருக்கடிக்கு தீர்வு காண முடியும்.

அவை தொடர்பான குறுகிய திட்டங்களை நாம் தற்பொழுது செயற்படுத்தி வருகின்றோம். சர்வதேச நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக அதன் இறுதிக் கட்டத்தினை அடைந்துள்ளது. படுகடன் மீள் கட்டமைப்பு தொடர்பாக எமது நாட்டுக்கு நிதி உதவியினை வழங்குமாறு பிரதான பொருளாதார நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றோம். ஐக்கிய நாடுகள் சபையினால் வழிநடாத்தப்படுகின்ற சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நாம் செயற்படுத்தி வருகின்றோம். திரவ பெற்றோலிய வாயு, மின்சாரம் மற்றும் எரிபொருள் உள்ளடங்கலான அன்றாட தேவைகளை தடையின்றி வழங்குவதற்கான செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாம் பாடசாலைகளை மீள ஆரம்பித்துள்ளோம். பல்கலைக்கழகங்களும் தற்பொழுது திறக்கப்பட்டு வருகின்றன.

இந்த அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் குறுகிய காலத்திட்டத்தில் நாம் தற்பொழுது சரியான பாதையில் பயணிக்கின்றோம் என்பது தெளிவாகின்றது.

எனினும் இதன்மூலம் நாம் திருப்தியடைய முடியாது. ஏறக்குறைய 25 வருடங்களுக்கு செயற்படுத்தக்கூடிய தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்றினை நாம் உருவாக்குதல் வேண்டும். அப்பொழுதே எமது கொள்கையினை எவ்வித தடையுமின்றி நாம் செயற்படுத்த முடியும். நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டமானது தேசிய பொருளாதாரக் கொள்கைக்கான அத்திவாரமாக இருக்கும். 2023 வரவு செலவுத்திட்டத்தினூடாக தேசிய பொருளாதாரக் கொள்கையொன்றினை உருவாக்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த இடைக்கால வரவு செலவுத்திட்ட உரையானது, சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடுகள் மற்றும் 2023 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பொருளாதார உறுதிப்பாடு மற்றும் புத்துயிரளிப்பு என்பவற்றுக்குத் தேவையான வேலைச் சட்டகத்தையும் தயாரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடல் நிறைவுற்றதுடன், அது பற்றிய தகவல்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

பொருளாதார நெருக்கடி, பொருளாதார நெருக்கடிகளுக்கான காரணங்கள், பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை தீர்ப்பதற்கான வழிகள் என்ற விடயங்களை, தற்பொழுது நாம் சுருக்கமாகக் கலந்துரையாடினோம். தற்பொழுது நான் இடைக்கால வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை உங்கள் முன் சமர்ப்பிப்பதற்கு விரும்புகின்றேன்.

பேரண்ட அரசிறை வேலைச்சட்டகம்

2021 இன் இறுதியளவில் மொ.உ. உற்பத்தியில் 8.2 சதவீதமாகக் காணப்பட்ட அரசாங்கத்தின் வருமானத்தினை, 2025 இல் 15 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு எமது அரசிறை உறுதிப்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கம் 2025 இல் ஆரம்ப மிகையினை மொ.உ.உற்பத்தியில் 2 சதவீதமாக இலக்கிட்டுள்ளதுடன் நடுத்தர காலத்தின்போது இம்மட்டத்தினை மேலும் மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

2021 இன் இறுதியில் காணப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 110 சதவீதத்திலிருந்து 2032 அளவில் மொ.உ.உற்பத்தியில் 100 சதவீதத்தினை விஞ்சாத வகையில் அரசாங்கத்துறை படுகடனைக் குறைப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்கமொன்றுக்கு கட்டுப்படுத்தும் வகையில் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் வட்டி வீதமும் குறைந்த /சாதகமான வட்டி வீதமாக குறையுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

பேரண்டப் பொருளாதார நம்பிக்கை மீண்டும் தாபிக்கப்பட்டதன் பின்னர் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் வெளிநாட்டு நிதி வழங்கலினூடாக மீண்டும் அதிகரித்ததன் பின்னர் நாணய மாற்று வீதங்கள் மீதான மோசமான அழுத்தமும் குறைவடையுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

பொருளாதார வளர்ச்சியினை அதிகரிப்பதற்கான கட்டமைப்பு மறுசீரமைப்புகளை செயற்படுத்துவதினூடாக நடுத்தரகால பொருளாதார வளர்ச்சியானது 5 சதவீதத்தினை மீண்டும் அடையமுடியுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் பிரதான விடயங்கள்

இந்த இடைக்கால வரவு செலவுத்திட்டமானது 2022 சனவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைப் பொதிக்கான வசதியேற்பாடுகளை உள்ளடக்கியுள்ளதுடன், சமூக நலன்புரி பாதுகாப்பு வலைகளை (Social Safety Nets) அதிகரிப்பதற்கான ஒதுக்கீடுகள், 2022 இல் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவு காரணமாக ஏற்பட்ட மேலதிகச் செலவினம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றினால் தற்போதுள்ள கருத்திட்டங்களை மீள் நோக்கப்படுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவிகள் மற்றும் அதிகரித்த உரமானியம் என்பவற்றுக்கான நிதி ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது.

நான் இதற்கு முன்னர் வாக்குறுதியளித்ததன் பிரகாரம், இந்த செலவினங்களை ஈடு செய்யும் வகையில் 2022 வரவு செலவுத்திட்டத்தில் ஏறக்குறைய ரூபா 300 பில்லியன் மூலதனச் செலவினத்தினை நீக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வருமான முன்மொழிவுகள்

வருமான வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, தொலைத் தொடர்பாடல் அறவீடு, பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு என்பன தொடர்பில் பல்வேறு வரி மறுசீரமைப்புகளினை செயற்படுத்துவதற்கான அங்கீகாரம் தற்பொழுது கிடைக்கப் பெற்றுள்ளதுடன் வரி தொடர்பான சில முன்மொழிவுகள் தற்பொழுது செயற்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, 2022 செப்டம்பர் 1 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படும் வகையில், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 12 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை அதிகரிக்கப்படும்.

2022 மே மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அதிக வருமான முன்மொழிவுகள் 2022 ஒக்டோபர் 1 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்படும்.

இந்த முன்மொழிவுகளினைச் செயற்படுத்துவது வருமான அதிகரிப்புக்கு உதவியாக அமையும். இதன் மூலம் அரசாங்கத்தின் செலவினத்திற்காக பணம் அச்சிடுதலையும் படிப்படியாகக் குறைக்க முடியும்.

மேற்குறித்த முன்மொழிவுகளிலிருந்து கிடைக்கின்ற வருமானம் 2022 ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கான திருத்தத்தில் சமர்ப்பிக்கபட்ட வருமான மதிப்பீடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக 2023 வரவு செலவுத்திட்டத்தினை இலக்காகக் கொண்டு புதிய வருமான அதிகரிப்பு முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வரி நிர்வாகம்

வருமானத்தினை அதிகரிப்பதற்கான எமது முயற்சிகளில், வரி சேகரிப்பு வினைத்திறனை அதிகரிப்பதற்கும் வரித் தவிர்ப்பினைத் தடுப்பதற்கும் வரி நிர்வாகம் மிகவும் முக்கிய பங்களிப்பினைச் செய்ய வேண்டியுள்ளது.

தற்பொழுது காணப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக, வருடாந்த வருமானம் மற்றும் வரி விடுவிப்பு எல்லையினைக் கருத்திற் கொள்ளாது 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வதிவாளர்களுக்கும் கட்டாய வரிப் பதிவொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இலங்கை சுங்கம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. இலங்கை சுங்கத்தின் பொறுப்புக்களை வினைத்திறனுடனும் பயன்வலு மிக்கதாகவும் செயற்படுத்துவதற்கு அதன் நிறுவன, நிர்வாக மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் இதன் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வரியல்லாத வருமானம்

தேசிய பொருளாதார நலன் மற்றும் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டுக்கு எவ்வித பாதிப்புமின்றி, எமது கனிய வளங்களை மிகவும் சிறந்த வகையில் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு உயர் தொழில் நுட்பங்களுடன் கூடிய கைத்தொழில் முதலீடுகள் தொடர்பாக இலங்கைப் பங்காளர்களுடன் இணைந்த தொழில் முயற்சிகளைத் தாபிப்பதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் /அல்லது தொழில்நுட்பத்தினைக் கொண்டவர்களை கவர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

செலவினத்தை முகாமை செய்தல்

மூலதன செலவின கருத்திட்டங்களுக்காக மிகவும் விவேகமான மற்றும் சான்றினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைப்படுத்தல் பொறிமுறையொன்றினை உருவாக்குவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கல்வி, சுகாதாரப் பராமரிப்பு, பொதுப் பாதுகாப்பு, அரசாங்க சேவை டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற முன்னுரிமைத் துறைகளுக்கு நிதியளிக்கப்படும்.

வினைத்திறன் மிக்க செலவின முகாமைத்துவத்திற்கு மிகவும் சிறந்த மற்றும் உறுதியான மேற்பார்வை அவசியமாகும். இவ் வகையில், அரசாங்க செயன்முறை சிறந்த முறையில், அது செயற்பட வேண்டிய வகையில் செயற்படுவதனை உறுதிப்படுத்துகின்ற பொறுப்பினைக் கொண்ட, ஐக்கிய அமெரிக்காவில் காணப்படுகின்ற கண்காணிப்பாளர் நாயகம் (Inspector General) போன்ற முறைமையொன்றினை தாபிப்பதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன். அரசாங்க நிறுவனங்களில் மோசடி, வீண் விரையம் மற்றும் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதனை தடுப்பதுடன் அவற்றினை இனங்காண்பதன் மூலம் அரசாங்கத்தின் நன்மதிப்பினைப் பாதுகாப்பதற்கு இந்த கண்காணிப்பாளர் நாயகம் அதிகாரமளிக்கப்படுவதுடன் தீவிரமாக செயற்படுதலும் வேண்டும்.

உகந்த முறையில் பயன்படுத்தல் மற்றும் வருமானம் ஈட்டக்கூடிய செயற்பாடுகளுக்குப் பொருத்தமான சொத்துக்களை இனங்காணும் நோக்கத்துடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் மற்றும் காணிகள் தொடர்பில் விரிவான கணக்காய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைத்தல்

தற்பொழுது நாட்டில் 341 உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுவதுடன், 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் இவற்றுள் உள்ளடங்குகின்றன. இந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே வருமான மூலங்களைக் கொண்ட பல உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுவது போன்று போதியளவு வருமான மூலங்கள் காணப்படாத உள்ளூராட்சி மன்றங்களும் உள்ளன என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால், மிகவும் வினைத்திறன் மிக்க மக்கள் சேவையினை வழங்குதல் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக ஆரம்பக் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகள் சிலவற்றினை அவற்றுக்கு அண்மையில் அமைந்துள்ள நகர சபை அல்லது மாநகர சபையுடன் ஒருங்கிணைக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் 22 பிரதேச சபைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறான உள்ளூராட்சி மன்றங்களின் விபரம் பின்னிணைப்பு VII இல் தரப்பட்டுள்ளது. மக்களுக்கான சேவையினை இலகுவாகவும் வினைத்திறனுடனும் வழங்குவதற்கும் உரிய வருமானத்தினை துரிதமாக சேகரிப்பதற்கும் நிகழ்நிலை வசதிகளை (Online Services) வழங்குவதற்கு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 2022 ஆம் ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இவ்வாறான நிகழ்நிலை வசதியுடைய வருமான சேகரிப்பு முறைமை செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

பல்வேறு நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள கருத்திட்ட அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட அலகுகளில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையிலான பதவியினர் மற்றும் உயர்ந்த கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் அவற்றினது செயற்பாடுகளினை மீளாய்வு செய்வது முக்கியமானதாகும். எனவே, அவற்றினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படுகின்றதா என்பதுடன் அவ்வாறான நிறுவனங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்படவேண்டிய தேவை காணப்படுகின்றதா என்பதை மீளாய்வு செய்வதற்கும் மூன்று மாத காலத்திற்குள் அமைச்சரவைக்கு அது தொடர்பான சிபாரிசினை சமர்ப்பிப்பதற்கும் குழு ஒன்றினை நியமிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இடைக்கால பட்ஜட் - 2022



2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தை திருத்துதல்

(09 ஆம் பக்கத் தொடர்)

அரசதுறை மறுசீரமைப்பு

வினைத்திறன்மிக்க செலவு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையினை சீர்செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். இதன் முதற்கட்டமாக 5 வருட காலத்திற்கு சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றுக்கொண்டு வெளிநாடு செல்வதற்கு அல்லது பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விரும்புகின்ற அரசாங்க ஊழியர்களுக்கு நாம் தற்பொழுது அனுமதி வழங்கியுள்ளோம்.

அரசாங்க சேவையிலுள்ள பதவியினரின் ஓய்வூதியம் பெறும் வயதினை 65 வரையும் பகுதியளவு அரச சேவையிலுள்ள அலுவலர்களின் ஓய்வூதியம் பெறும் வயதினை 62 அதிகரித்ததனால் சமூகத்தில் வேலையற்ற இளைஞர்களின் விரக்திநிலை அதிகரித்துவருகின்றமை தெரியவந்துள்ளது. அதே போன்று, பெரும்பாலான பதவிகளில் பதவியுயர்வு வழங்குகின்றபோது ஓய்வூதியம் பெறும் வயது அதிகரித்ததன் மூலம் பதவியுயர்வினை எதிர்பார்த்துள்ள பெரும் எண்ணிக்கையிலான அலுவலர்களுக்கு அச்சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

எனவே, இந் நிலையினை சீர்செய்வதற்கு ஓய்வூதியம் பெறும் வயது 60 ஆகக் குறைக்கப்படுகிறது. அதேபோன்று, தற்பொழுது அரசாங்க மற்றும் பகுதியளவு அரச சேவையிலுள்ள 60 வயதினை பூர்த்தி செய்து பணியில் ஈடுபட்டு வருகின்ற அனைத்து அரசாங்க மற்றும் அரச சார்பு ஊழியர்கள் 2022.12.31 ஆந் திகதிமுதல் பயன்வலுப்பெறும் வகையில் ஓய்வுறுத்தப்படுவர்.

அரசாங்க சேவையில் சிற்றூழியர்களை புதிதாக ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தொடர்பில் அனைத்து அரசாங்க சேவையினையும் உள்ளடக்கும் வகையில் பணி ஆய்வு (Work Study) ஒன்றினை 3 மாதத்திற்குள் மேற்கொண்டு அதன் அறிக்கையினை சிபாரிசுகளுடன் அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

அரசாங்கத்தின் கொள்கை என்ற வகையில், உயிர்ச்சுவட்டு எரிபொருளினைப் பயன்படுத்தி இயங்குகின்ற வாகனங்களை அரச துறைக்கான கொள்வனவு செய்தல் இதன் பின்னர் இடைநிறுத்தப்படுகின்றது.

எதிர்காலத்தில் அரச துறையின் பயன்பாட்டுக்காக மின்வலுவினைக் கொண்ட வாகனங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்படும் என்பதுடன் தனியார் துறையினரும் மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுவர்.

அரச துறைக்காக வாகனங்களை கொள்வனவு செய்யும் போது வாகனத்தின் வினைத்திறன் மற்றும் விலைகளை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான வாகன வகைகளைத் தீர்மானித்தல் வேண்டும். இந்த முன்மொழிவு கட்டம் கட்டமாக செயற்படுத்தப்படுவதுடன் 2026 சனவரி 01 இல் நிறைவு செய்யப்படும்.

தேசியப் பாதுகாப்பு – 2030

பூகோள ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நாடொன்று என்ற வகையில் இலங்கை அனைவருடனும் இணைந்து செயற்பட வேண்டுமென்பதுடன் எழுகின்ற யதார்த்தங்களுக்கு முகங்கொடுப்பதற்கு எமது பாதுகாப்புத் துறைசார்ந்த கொள்கைகளினை திட்டமிடுதலும் வேண்டும்.

இதனால், இந்நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கும் நவீன மற்றும் மாற்றமடைந்து வருகின்ற உலகத்திற்கு ஏற்றவகையில் எமது பாதுகாப்புத் துறையினை தயார்படுத்துவதற்காக "தேசியப் பாதுகாப்பு – 2030" எனப்படும் மீளாய்வொன்றினை மேற்கொள்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அரசுடைமை தொழில் முயற்சிகள்

அரச துறை மறுசீரமைப்புகளில் மற்றுமொரு தீர்க்கமான விடயம் என்ற வகையில், அரச உடைமை தொழில் முயற்சிகளை முகாமைத்துவம் செய்வதாகும். பிரதான அரச உடைமை தொழில் முயற்சிகள் சிலவற்றுக்கு பாரிய அரசிறை ஆபத்து ஏற்பட்டுள்ளது. அவற்றில், எரிசக்தித் துறையில் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினையும், போக்குவரத்துத் துறையில் ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தினையும் விசேடமாக குறிப்பிட முடியும். இந்த நிறுவனங்கள் குறிப்பிடத்தக்களவு நட்டம், எதிர்மறையான பங்குரிமை மூலதனம் (ஸ்ரீ லங்கன் விமான சேவை/இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) மற்றும் குறிப்பாக அரச வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய பெருமளவிலான கடன் சுமைக்கு உட்பட்டு குறிப்பிடத்தக்களவு ஆபத்தினை நிதித் துறையில் உருவாக்கியுள்ளது.

அரசுடைமை தொழில் முயற்சிகளின் பங்கு விலக்கல் தொடர்பிலான வெற்றிகரமான நிகழ்ச்சித் திட்டமொன்றின் மூலம் வரி செலுத்துநர்கள் மற்றும் நிதி முறைமை மீதான சுமையினை குறிப்பிடத்தக்களவு இலகுபடுத்த முடியும். அதேபோன்று, பொருளாதாரத்தினை துரிதமாக மீள் எழுச்சி பெறச் செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதன் மூலம் கடனற்ற வெளிநாட்டு ஒதுக்குகளை உருவாக்குவதற்கும் உதவ முடியும். இதற்காக நிதி அமைச்சில் "அரசுடைமை தொழில் முயற்சிகள் மீள்கட்டமைப்பு அலகு" இனைத் தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மறுசீரமைப்பு செய்யப்படுவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனம் தவிர்ந்த பிரதான 50 தொழில் முயற்சிகளுக்கான இலக்குகளை நெருக்கமாக அவதானிப்பதற்கான நிறுவன அபிப்பிராய கூற்றினை (Statement of Corporate intent) அறிமுகப்படுத்தி மீண்டும் செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அரசுடைமை தொழில் முயற்சிகள் தொடர்பான இந்த கடினமான ஆனால் அத்தியவசியமான நடவடிக்கைகள் சவால் மிக்கவை என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் அவ்வாறு செய்யத் தவறுகின்றமை பேரழிவினை ஏற்படுத்தும் ஆபத்து மிக்கதாகும். குறிப்பாக நிதித்துறையின் ஸ்திரத் தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்துவதில் எதிர்காலத்தில் இதனைவிட பாரிய வரிச் சுமையினை மக்கள் சுமக்க வேண்டி நேரிடும்.

அரசிறை சட்டவாக்க / மேற்பார்வைச் சட்டகம்

முன்வைக்கப்பட்டுள்ள அரசிறை மறுசீரமைப்புகளானது எமக்கு அன்னியமானவையல்ல இப் பிரச்சனைகள் நீண்டகாலமாக அவதானிக்கப்பட்டுள்ளதுடன் 2019 வரை இலங்கை இவ்வாறான பல மறுசீரமைப்புகளை செயற்படுத்தி அரசிறை உறுதிப்பாட்டினை நோக்கிய பாதையில் பயணித்துள்ளது. ஆயினும், துரதிஷ்டவசமாக இவ்வாறான மறுசீரமைப்புகள் பின்னோக்கிச் சென்றுள்ளதுடன், அதனால் இன்றுநாம் எதிர்நோக்கியுள்ள நிலைமைக்கு பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு வேறு மாற்றுவழியொன்று இல்லை. எதிர்கால மற்றும் தற்பொழுது வாழ்கின்ற இளம் சந்ததியினரின் நலனைக் கருத்திற் கொண்டு இந்த மறுசீரமைப்புகளை கட்டாயம் செயற்படுத்தவே வேண்டியுள்ளது.

எனவே, இன்று எம்மால் செயற்படுத்தப்படுகின்ற எவ்வாறான மறுசீரமைப்பாயினும், நாம் அனைவரும் காண்பதற்கு எதிர்பார்க்கின்ற பொருளாதாரத்தினை மீளெழுச்சி பெறச் செய்வதனை தடம் புரளச் செய்கின்ற குறுகிய நோக்கங்களிலிருந்து பாதுகாப்பது அத்தியாவசியமானதாகும். இதற்காகவேண்டி உறுதியான அரசிறை விதிகளை (Fiscal rules) உள்ளடக்கிய அரச நிதி முகாமைத்துவ சட்டம் (Public Finance Management Act) ஒன்றின் கீழ் புதிய சட்டவாக்கங்களை நாம் அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது.

அரச வருமானத்தினை அதிகரிப்பதற்கு தேவையான முன்மொழிவுகளை பரிந்துரைப்பதற்கும் அதுதொடர்பான பிரச்சினைகளை கண்காணிப்பதற்குமான வழிவகைகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய பாராளுமன்ற குழுவினை (Parliamentary Committee on Ways and Means) தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அரசாங்க நிறுவனங்களிலுள்ள பயன்படுத்தப்படாத பொருட்களை அகற்றுதல்

பெரும்பாலான அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அதிகளவிலான பொருட்கள் குவிந்து காணப்படுவதுடன், அவற்றினை அகற்றுதல் / நீக்குதல் நீண்டகாலமாக மேற்கொள்ளப்படாததினால் குறித்த பயன்படுத்தப்படாத பொருட்களினை விற்பனை செய்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய அதிகளவான இலாபம் இல்லாமற் போகின்றது. இதனால், பயன்படுத்தப்படாத பொருட்களை அகற்றுவது தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் கண்காணித்து செயற்படுத்துவதற்காக பொதுத்திறைசேரியின் கொம்ப்ரோலர் நாயகமும் உள்ளடங்கும் வகையில் அரசாங்க ஊழியர்கள் மூன்று பேரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும்.

கடன் முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்தி தற்பொழுது இலங்கை மத்திய வங்கி, திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கடன் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக சுயாதீனமாக செயற்படக்கூடிய தேசிய கடன் முகாமைத்துவ நிறுவனம் (National Debt Management Agency NDMA) பொதுத்திறைசேரியின் கீழ் தாபிக்கப்படும்.

அரசாங்க மற்றும் தனியார் துறை பங்குபற்றுநர்களினால் மேற்கொள்ளக்கூடிய முதலீட்டு வாய்ப்புகளை இனங்காணுதல் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான வசதிகளை வழங்குவதற்காக அரசாங்க மற்றும் தனியார் பங்குபற்றுகையுடன் கூடிய தேசிய நிறுவனம் (National Agency for Public Private Partnership NAPP) ஒன்று தாபிக்கப்படும். இம் முன்மொழிவினைச் செயற்படுத்துவதற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

நாணய மற்றும் நிதித்துறை

நாட்டின் நாணயத்துறையினை வலுப்படுத்துவதற்கான பிரதான சட்டவாக்கமாக புதிய மத்திய வங்கிச் சட்டம் செயற்படுத்தப்படும். இச் சட்டம் உருவாக்கப்படுவதன் மூலம், பணவீக்கத்தினை இலக்கிடுதல் மற்றும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு மத்திய வங்கியின் மூலம் நிதி அளிப்பதனை அதாவது, பொதுவாக அறியப்பட்ட பணம் அச்சிடுதலைத் தடுத்தல் என்பவற்றுக்கான சட்ட ஏற்பாட்டினை வழங்குகின்றது.



புதிய சட்டத்தின் மூலம் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் அரசியல் மயப்படுத்தப்படுவதும் தடுக்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு, 2019 ஆம் ஆண்டில் இச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்குமேயானால் இன்று நாம் காண்கின்ற உயர் பணவீக்கத்தினை அனுபவிக்காதிருக்க முடிந்திருக்கும்.

அரசாங்க வங்கிகளின் மொத்த பங்குரிமைகளில் 20 சதவீதத்தினை குறித்த வங்கிகளின் வைப்பாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்குதல்

பொருளாதார நெருக்கடி, வட்டி விகித அதிகரிப்பு, கடன் மீள் அற வீட்டில் சிரமம், கடன் பெற்ற தொழில் முயற்சிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளினால் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பவற்றுக்கு ஏற்பட்ட பாதிப்பினை குறைப்பதற்கும் இரண்டு வங்கிகளினதும் திரவத் தன்மை பிரச்சினைகளை குறைக்க புதிய மூலதன வசதியினை வழங்க வேண்டியுள்ளதால் குறித்த இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி உரித்துடைய முழு பங்குகளில் 20 சதவீதத்தினை வங்கிகளின் வைப்பாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு முன்மொழியப்படுகிறது.

அரச நிதியீட்டம் மிகவும் குறைவாகக் காணப்படுவதனால் அரச வங்கிகளுக்கு மேலதிக மூலதனத்தினை வழங்குவதற்கு இச்சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்குள்ள வாய்ப்பு வரையறுக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

சமூக நலன்புரி

சமூக நலன்புரிச் சட்டம் 2002 இல் சட்டமொன்றாக உருவாக்கப்பட்டது. ஆயினும் இதுவரை முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. சமூக நலன்புரிச்சபை தற்பொழுது செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் தரவுத் தளம் அல்லது சமூகப் பதிவகம் ஒன்றினைத் தாபிப்பதற்கு தரவு சேகரிப்பு செயன்முறை தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது. பக்கச்சார்பற்ற ஊர்ஜிதப்படுத்தக்கூடிய அளவுகோல்களின் மூலம் பயன்பெறுநர்களை அடையாளங் காண்பதற்கான புதிய பொறிமுறையொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது. இது வெளிப்படைத் தன்மையான சட்டங்கள் மற்றும் முறைமைகள் செயற்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும். இச்செயன்முறை நிறைவுற்றதுடன் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் சிறந்த முறையில் இலக்கிடப்படுவதுடன் பயனாளர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக பணத்தினை வைப்புச் செய்வதற்கும் முடியுமாகவிருக்கும்.

தற்பொழுது நிலவுகின்ற நெருக்கடிகளினால், பெரும்பாலானோர் எதிர்நோக்குகின்ற சிரமங்களை நான் நன்கு அறிவேன். இதனால்தான் மூலதனச் செலவினத்தினைக் குறைத்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிகரித்த சலுகையினை வழங்குவதற்கு நான் தீர்மானித்துள்ளேன்.

நீங்கள் அறிந்த வகையில், வேலை இழப்பு, விவசாய உற்பத்திகளின் வீழ்ச்சி மற்றும் பல்வேறு காரணங்களினால் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாமை போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர உதவியாக மேலதிக மாதாந்தக் கொடுப்பனவினை வழங்குவதற்கு 2022 மே முதல் யூலை மாதம் வரை மேலதிகமாக ரூபா 31,000 மில்லியனை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

மேற்குறித்த பாதிப்புகளுக்குட்பட்டவர்கள் மீதான பொருளாதார நெருக்கடியினால் ஏற்படும் அழுத்தத்தினைக் குறைப்பதற்கு 2022 ஆம் ஆண்டில் எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு இந் நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் 20,000 ரூபாவிற்கு மேலதிகமாக மேலும் 2,500 ரூபாவினை மாதாந்த மேலதிக கொடுப்பனவாக வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மிகவும் அவசர உதவி தேவைப்படும் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 61,000 குடும்பங்கள் காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 2022 ஆம் ஆண்டில் எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு அவ்வாறான குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தம் 10,000 ரூபாவினை வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

மேற்குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தையும் நான்கு மாதங்களுக்குள் செயற்படுத்துவதற்கு ரூபா 46,600 மில்லியனை நான் ஒதுக்கீடு செய்கின்றேன்.

அண்மைக் காலமாக மண்ணெண்ணெய் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள சிறு மீன்பிடி படகுகளுக்கும் மின்சார வசதியற்ற பெருந் தோட்ட பிரதேசங்களில் வாழுகின்ற மக்களுக்கும் பெரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

சமகால பொருளாதார நெருக்கடியினை குறைப்பதற்கும் சமூக ஸ்திரத் தன்மையினை மீள நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த உலக வங்கியின் கீழ் ரூபா 133 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, தற்பொழுது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 3.2 மில்லியன் மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கு இந்த வரவு செலவுத்திட்டத்தினைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குறை நிரப்பு மதிப்பீட்டினூடாக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டேன்.

இதன்கீழ் தற்பொழுது சமுர்த்தி உதவி பெறுகின்ற ஏறக்குறைய 1.7 மில்லியன் குடும்பங்களுக்கு, அவர்கள் பெறுகின்ற மாதாந்த சமுர்த்தி உதவு தொகையினை 5,000 ரூபாவிலிருந்து 7,500 ரூபா வரைக்குமான தொகையொன்றாக அதிகரித்து வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக சமுர்த்தி கொடுப்பனவுகளை எதிர்பார்த்து காத்திருப்பு பட்டியலிலுள்ள ஏறக்குறைய 726,000 குடும்பங்களுக்கு தற்காலிகமாக 5,000 ரூபா உதவு தொகை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், முதியோர், அங்கவீனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு 5,000 ரூபாவிலிருந்து 7,500 ரூபா வரைக்குமான தொகையொன்றாக அதிகரிக்கப்பட்டது. மேலும், இந்த உதவியினை எதிர்பார்த்து காத்திருப்புப் பட்டியலில் இருந்தவர்களுக்கான தற்காலிக ஏற்பாடாக 5,000 ரூபா உதவி வழங்கப்பட்டது.

இக்கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மேற்படி சலுகைகளுக்கு மேலதிகமாக, 2022/2023 பெரும் போகத்தில் நெற்செய்கைக்கு தேவையான யூரியாவினை இறக்குமதி செய்வதற்கு 110 மில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா 40 பில்லியன்) ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்பொழுது இதற்கான கொள்வனவுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதன் மூலம் எதிர்வருகின்ற பெரும்போகத்தில் நெற் செய்கையாளர்களுக்கு சிறந்த அறவடையினைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதுடன், அதன் மூலம் அரிசி நுகர்வாளர்களுக்கு சாதாரண விலையில் அரிசியினைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்குமென நான் நம்புகின்றேன்.

அதேபோன்று இக்கடன் திட்டத்தின் மூலம், வெளிநாட்டுச் செலாவணி பற்றாக்குறையினால் நாட்டில் சமயல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டதனால் அவற்றினை நிவர்த்தி செய்வதற்கு சமையல் வாயுவினை இறக்குமதி செய்து குறுகிய காலத்தில் நாடு முழுவதும் விநியோகம் செய்யப்பட்டது. அத்துடன், எதிர்காலத்திலும் பற்றாக்குறை ஏற்படாதவாறு தேவையான சமையல் எரிவாயுவினைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் செயற்பட வேண்டியுள்ளது. அதற்காக இக்கடன் உதவியிலிருந்து ஏறக்குறைய 70 மில்லியன் டொலர்களை (ரூபா 25 பில்லியன்) செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மேலே குறிப்பிடப்பட்ட ரூபா 50 பில்லியன் சலுகைகளுக்கு மேலதிகமானதாகும்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

இடைக்கால பட்ஜட் - 2022



2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தை திருத்துதல்

(10 ஆம் பக்கத் தொடர்)

புதிய சட்டங்கள்/சட்ட திருத்தங்களை அறிமுகம் செய்தல்

பொருளாதாரத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்பாடுகளுக்கு வசதியளிக்கும் வகையில் குறுகிய காலத்தில் மறுசீரமைப்புகளை துரிதப்படுத்தப் பொருத்தமான திருத்தங்கள் மற்றும் புதிய சட்டங்களை கீழ்வருமாறு அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

(அ) புதிய சட்டங்கள்

உணவுப் பாதுகாப்புச் சட்டமூலம்
அரச ஆதன முகாமைத்துவ சட்டமூலம்
பொருளாதார உறுதிப்பாட்டு சட்டமூலம்
கரைகடந்த பொருளாதார முகாமைத்துவ சட்டமூலம்
அரசாங்க சேவை ஊழிய சட்டமூலம்
அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம்
குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட வளாகங்களின் உடைமையினை மீளப்பெறுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம்
பங்களிப்பு தேசிய ஓய்வூதிய நிதிய சட்டமூலம்
வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கான முகவராண்மை சட்டமூலம்

(ஆ) சட்ட திருத்தங்கள்

கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கான திருத்தங்கள்
சுங்க கட்டளைச்சட்டத்திற்கான திருத்தங்கள்
நிதிச் சட்டத்திற்கான திருத்தங்கள்
வெளிநாட்டுச் செலாவணி சட்டத்திற்கான திருத்தங்கள்

இதற்கு மேலதிகமாக, பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில்களை இழந்த ஊழியர்கள் தொடர்பில் ஊழியர் தொழில் முடிவுறுத்தல் சட்டத்திற்கு (Termination of Employment of Workman Act TEWA) பதிலாக மிகவும் யதார்த்தமான பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படும்.

ஐக்கிய அமெரிக்காவில் வங்குரோத்து நிலைக்குள்ளான வியாபார தொழில் முயற்சிகளை மறுசீரமைப்புச் செய்வதற்கு தற்பொழுது காணப்படுகின்ற சட்ட ஏற்பாடான வங்குரோத்து கோவையின் 11 ஆவது அத்தியாயத்தில் கடன் சுமையினால் நெருக்கடிக்குள்ளான வியாபார தொழில் முயற்சிகளை மறுசீரமைப்பு செய்யவேண்டிய வழிமுறை தொடர்பான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. வங்குரோத்து நிலை மாத்திரம் தொழில் முயற்சிகளை மூடுவதற்கான காரணமாகாது என்பதுடன், வியாபாரத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்ற அதேவேளை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மீள் கட்டமைத்தல், கடன் சுமையிலிருந்து மீளுதல் தொடர்பான மறுசீரமைப்பு திட்டமொன்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டினை இலங்கைக்கும் பொருந்தும் வகையில் புதிய சட்டங்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

விவசாயத்துறை

உற்பத்தியில் வீழ்ச்சி, உரம், கிருமிநாசினி பயன்பாடு போன்ற விவசாய பிரயோகங்கள் காணப்படாமை காரணமாக அண்மைக் காலமாக சிறிய விவசாயிகளுக்கு கடினமான காலப்பகுதியினை கடந்து செல்லவேண்டி ஏற்பட்டது. இதனால், 2 ஹெக்ரேயர் அல்லது அதற்குக் குறைந்தளவு நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட ஏறக்குறைய 28,259 விவசாயிகள் 2022.05.31 ஆந் திகதிவரை அரசாங்க வங்கிகளில் பெற்ற பயிர்ச் செய்கைக் கடன்களை செலுத்துவதற்கு முடியாதுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. அவர்களை இச்சுமையிலிருந்து விடுவிப்பதற்கு, பொதுத்திறைசேரியின் காசுப் பாய்ச்சலில் அழுத்தத்தினை ஏற்படுத்தாத வகையில் இம்முன்மொழிவினை கட்டம் கட்டமாகச் செயற்படுத்துவதற்கு தேவையான நிதியாக ரூபா 350 மில்லியனை நான் ஒதுக்கீடு செய்கின்றேன்.

விவசாயத்துறை மற்றும் தொழில்முயற்சியாண்மை இரண்டினையும் ஒன்றாக இணைப்பதற்காக நாம் செயற்படுதல் வேண்டும். பிரச்சினைகளை சரியான முறையில் விளங்கிக் கொண்டு எமது விவசாயத் துறையினை மேம்படுத்துவது தொடர்பில் மீண்டும் சிந்தித்தல் வேண்டும். இளைஞர்கள் புதிய தொழில்நுட்பங்களை விரைவாக உள்வாங்கிக் கொள்பவர்கள். அவர்கள் பெறுமதிச் சங்கிலிகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு புத்தாக்க சாதனங்களை பயன்படுத்த முடியும். இப் பின்னணியில், அதிகூடிய நன்மையினைப் பெற்றுக்கொள்வதற்கு இளைஞர் விவசாய கம்பனிகளைத் தாபித்து அவற்றை 331 பிராந்திய இளைஞர் கழக சம்மேளனங்களுடன் இணைப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

விவசாய உற்பத்திக்கான பெறுமதிச் சங்கிலிகளை அபிவிருத்தி செய்வதும் மிக முக்கியமானதாகும். இந்நோக்கத்திற்காக, உள்ளூர் விவசாய அபிவிருத்தி பெறுமதி சங்கிலி நிகழ்ச்சித் திட்டத்தினை (Domestic Agriculture Development Value Chain Program) வழிப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இலங்கை மத்திய வங்கியின் சொந்த நிதியினைப் (ரூபா 1 பில்லியன்) பயன்படுத்தி உள்ளூர் விவசாய அபிவிருத்தியின் முதற் கட்டத்தினை செயற்படுத்துவதுடன் வெளிநாட்டு சந்தைக்கான உற்பத்திகளை ஊக்குவிக்கின்ற அதேவேளை, அபிவிருத்தி பங்காளர்களின் உதவியுடன் மேலும் இத்திட்டத்தினை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூர் பாற்பொருள் உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு உறுதியான செயற்றிட்டமொன்று அவசியமாகும். இதனால், சகல தரப்பினரின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் அல்லது அபிவிருத்திப் பங்காளர்களினால் நிதி அளிக்கப்படும் கருத்திட்டமொன்றின் மூலம் தேசியமட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றினை செயற்படுத்துவது அவசியமாகும். மலை நாட்டுக் காலநிலை உற்பத்தித்திறன் கூடியது என்ற வகையில், பெருந்தோட்டங்களில் பயன்படுத்தப்படாத அல்லது குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட காணிகளை இக்கருத்திட்டத்திற்கு பயன்படுத்த முடியும். இதற்காக ஆரம்பத்தில் ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

கடந்த காலங்களில் பயிரிடப்பட்ட, நிலங்களின் அளவு மற்றும் விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாக விதை மற்றும் நடுகைப் பொருட்களின் பற்றாக்குறை ஏற்பட்டதனால் விவசாயிகளுக்குத் தேவையான விதை மற்றும் நடு கைப் பொருட்களை வழங்குவதற்கு முடியுமான வகையில் விவசாயத் திணைக்களம் மற்றும் அரச பண்ணைகள் துரித நிகழ்ச்சித்திட்டமொன்றினை செயற்படுத்துதல் வேண்டும். இதன் அடிப்படையில், தேவையான விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ரூபா 400 மில்லியனை விவசாயத் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

அரசாங்க காணிகளை வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனுடன் பயன்படுத்த வேலையற்ற இளைஞர் யுவதிகளை ஈடுபடுத்தல்

இந்நோக்கத்திற்காக இனங்காணப்பட்ட காணிகள் அமைந்துள்ள பிரதேசங்களில் தற்பொழுது வேலையற்றுள்ள இளைஞர் குழுக்களுக்கு (ஏறக்குறைய 10 உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள்) 20 ஏக்கர் காணிகளை ஒதுக்கீடு செய்து அவற்றை விவசாய மற்றும் கால்நடை வளர்ப்புக்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் ஏனைய காணிகளை இதற்காகப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக் காணிகளுக்காக பெயரளவிலான வாடகை மாத்திரமே அறவிடப்படும்.

இந்த முன்மொழிவினைச் செயற்படுத்துவதற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தேசிய உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திடம்

உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் அதனை தேசிய முன்னுரிமை ஒன்றாக செயற்படுத்துவதற்கும் உணவு உற்பத்தி அதிகரிப்பு, சேகரிப்பு, களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் போன்ற பல விடயங்களை உள்ளடக்குகின்ற "தேசிய உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்" ஒன்றினை அறிமுகப்படுத்தி அதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக செயற்படுத்த நான் முன்மொழிகின்றேன்.



விவசாய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தினை மீளாய்வு செய்தல்

விவசாய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துகின்ற ஆரம்பம் முதல் காப்புறுதி தவணைக் கொடுப்பனவுகளினை செலுத்தியதன் மூலம் விவசாயிகள் உட்சாகத்துடன் பங்குபற்றிய போதிலும் தற்பொழுது இக் காப்புறுதி தொடர்பான அனைத்து பணமும் அரசினால் செலுத்தப்படுவது தெரியவந்துள்ளது.

இதற்கமைய, பலவேறு காப்புறுதி நிறுவனங்களை தொழிற்படுத்துவது அவசியமா, மற்றொரு காப்புறுதி முறைமையின் கீழ் விவசாயிகளுக்கு உரிய வசதிகளை வழங்குவது சாத்தியமா என்பது தொடர்பில் மீளாய்வொன்று இடம்பெறுதல் வேண்டும்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

இலங்கை யின் உலக போட்டித்தன்மை தரமதிப்பீட்டினை மேம்படுத்து வதன் மூலம் வெற்றியினைப் பெற்றுக்கொள்வதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேம்பாடு முக்கியமானதாகும்.

இதற்கமைய, உலக பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியுடன் ஆரம்ப தொழில் முயற்சி கலாசாரத்துடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவித்தல் மற்றும் வர்த்தகமயப்படுத்தலுக்கான பொறிமுறையினை தாபிப்பதற்கும் ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்ய நான் முன்மொழிகின்றேன்.

உள்ளூர் பொதியிடல் உற்பத்தி ஊக்குவிப்பு

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தலினை மேம்படுத்துவதன் மூலம் விவசாயப் பொருட்கள் வீணாகுவதனை குறைப்பது அவசியமாகும். எனவே, விவசாய உற்பத்திகளைப் பாதுகாத்தல் மற்றும் சந்தைப்படுத்தலுக்கு உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி உணவுப் பொதியிடல் கைத்தொழில் ஊக்கிவிக்கப்படுதல் வேண்டும்.

இதற்கமைய, உணவுப் பொதியிடலுக்கான உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் /உதிரிப்பாகங்கள் இறக்குமதி மீதான இறக்குமதித் தீர்வையில் 50 சதவீத சலுகை வழங்கப்படும். இதுதவிர, பனை அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு மையம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை என்பன இணைந்து புதிய பொதியிடல் நிகழ்ச்சித்திட்டமொன்றினை அறிமுகம் செய்வதுடன் புத்தாக்க பொதியிடல் மூலம் ஏற்றுமதி சந்தை ஊக்குவிப்புக்கு பங்களித்தல் வேண்டும்.

இந்த முன்மொழிவினைச் செயற்படுத்துவதற்காக ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்ய முன்மொழிகின்றேன்.

சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு

இவ்வருடத்தின் செப்ரெம்பர் மாதத்திலிருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், சுற்றுலாச் சபை மற்றும் சுற்றுலா தொழிற்றுறையுடன் தொடர்புற்ற ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் விசேட நிகழ்ச்சித்திட்டங்களை சுற்றுலாத்துறை அமைச்சு ஏற்பாடு செய்தல் வேண்டும். இங்கு, எதிர்காலத்தில் இலங்கையில் இடம்பெறவுள்ள பல்வேறுபட்ட இனங்களுக்கு தனித்துவமான கலாசார / சமய நிகழ்வுகளை இலக்காகக் கொள்வது அவசியமாகும். இத்தொழிற்றுறையின் முக்கியத்துவத்தினை கருத்திற் கொண்டு 2023 இறுதியளவில் வருடமொன்றுக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 25 இலட்சத்திற்கு அதிகரிப்பினை இலக்காகக் கொண்டு செயற்படுதல் வேண்டும்.

அதேபோன்று, அதிக செலவினத்தினை மேற்கொள்ள வசதியுடைய சுற்றுலாப் பயணிகளினை (High end tourists) கவர்வதற்கு விசேட கவனம் செலுத்துவதற்கு முன்மொழியப்படுகின்றது.

அத்துடன், சுற்றுலா பயணிகளைக் கவர்கின்ற புதிய இடங்களை அடையாளங் காணுதல் மற்றும் தேவையான வசதிகளை மேம்படுத்துதல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு அறிக்கையொன்றினை சமர்ப்பிப்பதற்கு பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றினை நியமிப்பதற்கும் ஒரு மாதத்திற்குள் அவர்களது சிபாரிசுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றினைப் பெற்று அவற்றினைச் செயற்படுத்துவதற்கும் முன்மொழியப்படுகின்றது. இதற்காக ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

காலநிலை நிதியத்திலிருந்து (Climate Fund) வசதிகளைப் பெறுதல்

இலங்கைக்குள் ஏற்படுகின்ற காலநிலை மற்றும் வானிலை தாக்கங்கள் காரணமாக ஏற்படுகின்ற விபத்துகள், அனர்த்தங்கள் மற்றும் சொத்துக்களின் அழிவு என்பன அதிகரித்து வருவதனை காணக்கூடியதாக உள்ளது. காலநிலை தாக்கத்தினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இதற்காக வேண்டி, சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தயாரித்து காலநிலை நிதியத்திலிருந்து தேவையான ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதுடன் அதற்கமைவாக பாதிப்பு தணிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினைச் செயற்படுத்துதல் வேண்டும்.

உயர்கல்வி வாய்ப்புகளை விரிவாக்குதல்

உலகில் பல நாடுகள் தமது வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிப்பதற்கு வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை திறந்துவிட்டுள்ளன. தெற்காசிய பிராந்தியத்தில் பங்களாதேஷ், இந்தியா மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் தமது வெளிநாட்டு செலாவணி இருப்புகளை கட்டியெழுப்புவதற்கு வெளிநாட்டு மாணவர்களுக்கு தமது நாடுகளை திறந்துவிட்டுள்ளன. இதற்கமைய இலங்கையும் வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கு தனியார் முதலீட்டினை ஊக்கு விக்க வேண்டிய தேவையுள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித பாடங்களுடன் (STEM Subjects) நிதி தகவல் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவம் என் ப வற்றுக்கு விசேட கவனம் செலுத்தும் வகையில் இலங்கைக்குள் கிளைப் ப ல்கலைக்கழகங்களை தாபிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்நோக்கத்திற்காக, தேவையானபோது தேவையான இடங்களில் திருத்தங்களுக்கு உட்படும் வகையில் கம்பனிகள் சட்டம், பல்கலைக்கழக சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களில் காணப்படும் ஏற்பாடுகளுக்கமைவாக இந்த கிளை பல்கலைக்கழகங்களை தாபிப்பதற்கான அனைத்து வசதிகளும் முதலீட்டுச் சபையினூடாக அரசினால் வழங்கப்படும்.

உயர் கல்வியில் தனியார் முதலீட்டிற்கான வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் அரசாங்கத்தின் வளங்கள் அதற்காகப் பயன்படுத்தப்படுவதனை தவிர்ப்பதுடன், அதன் மூலம் இலவசக் கல்வி பாதுகாக்கப்பட்டு அதனை தற்பொழுது காணப்படும் மட்டத்தினைவிட மேலும் விரிவாக்குவதனை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு முடியுமாக இருக்கும். இந்தப் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கு இலங்கை மாணவர்களுக்கு புலமைபரிசில்களும் வழங்கப்படும்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கிளை வளாகமொன்றினை குருனாகலில் திறப்பதற்கு முன்மொழியப்படுகிறது.

திறன் அடிப்படையில் புதிய வேலை வாய்ப்புகளுக்கு வசதியளித்தல்

இலங்கை தொழில் சந்தையில், முன்பயிற்சி எதுவுமற்ற நிலையில் தொழில் புரிவதனால் கிடைக்கின்ற அனுபவத்தினைக் கொண்டு பணியாற்றுவோர் பலர் உள்ளனர். இவர்களுக்கு தொடர்புடைய கோட்பாட்டு அறிவு உள்ளடங்களாக அதிக பயிற்சி மற்றும் தகைமையினை வழங்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

இதன் மூலம் வேலையில் உற்பத்தித் திறன் வளர்ச்சியடைவதுடன் திறன் மிக்க பதவியணியினைக் கொண்டிருப்பதன் மூலம் வியாபார தொழில் முயற்சிகளுக்கு உலகளாவிய பின்னணியில் போட்டித்தன்மைமிக்க இடமொன்றினைப் பெற்றுக் கொள்வதற்கும் முடியுமாக இருக்கும்.

அதேபோன்று வேலை தேடுநர்கள் மிகவும் வினைத்திறன் மிக்க வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

கொவிட் 19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி என்பவற்றின் தாக்கத்தின் காரணமாக தமது தொழில்களை பலர் இழந்துள்ளதுடன் அவர்களுக்கு புதியதொழில் வாய்ப்புகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள தொழிற்சாலைகளில் ஒத்தழைப்பு மட்ட ஊழியர்களாக (Support level Staff) பணியாற்றிய கிராமிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஏறக்குறைய ஐந்து வருட காலம்வரை பணியாற்றிவிட்டு மீண்டும் தமது கிராமங்களுக்குச் செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதன் போது பெண்களுக்கு தொழில்வாய்ப்பு இல்லாமற் போவதுடன் ஆண்கள் முறைசாரா தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

இதற்கமைய சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றிய தொழில் மூலம் பெற்றுக் கொண்ட திறன்களை அடிப்படையாகக் கொண்டு புதிய வேலை வாய்ப்பு ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியுமானவரை மேலதிக பயிற்சியினை வழங்குவது அவசியமாகும்.

அரசாங்க துறையிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் (Youth Corps, VTA, NAITA போன்ற) மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சித் துறையில் ஒழுங்குபடுத்துகை நிறுவனமான TVEC இன் ஒத்துழைப்பினையும் பெற்று குறித்த தொழிலாளர்களுக்கு பயிற்சியளித்து NVQ சான்றிதழினை வழங்குவதற்கு இம்முறைமையின் மூலம் இயலுமாகவிருக்கும்.

இதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

சிறியளவு சுயதொழில் / வாழ்வாதார தொழில்களில் ஈடுபட்டுள்ள சமூகங்களின் தொழிற் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்

நகர மற்றும் கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற சமூகங்களில் பெரும்பாலானவர்கள் சிறியளவு சுயதொழில் /வாழ்வாதார தொழில்களில் (Livelihood Occupation) ஈடுபட்டுள்ளனர் இந்த சமூகத்தின் வாழ்கைத் தொழிலுக்காக தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் பகுதிநேர அல்லது குறுகிய கால பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அப்பதவிகளின் உற்பத்தித்திறன், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பன அதிகரிப்பதுடன் உற்பத்தியின் தரமும் மேம்பட்டிருக்கும்.

இந்நோக்கத்திற்காக, அரசாங்கத்தின் கீழ் இயங்குகின்ற ஒவ்வொரு வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையத்திலும் சமூகங்களை வலுப்படுத்துவதற்கான சமுதாய அலகொன்றினைத் தாபிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. பயிற்சி நிலையங்களில் காணப்படாத தொழில்நுட்ப சேவைகள் வெளியிடங்களிலிருந்து பெறப்படுவதுடன் பயிற்சி வசதிகள் குறித்த சமூகத்திற்காக வழங்கப்படும். இதற்கமைவாக, உணவு மற்றும் குடிபான தயாரிப்பு, கருவாடு தயாரிப்பு, மரக்கறி உலரவைத்தல், தையல், பின்னல், கடைச்சல், நெய்தல், பித்தளைக் கைத்தொழில் மற்றும் கொல்லன் தொழில் என்பவற்றை வாழ்வாதாரமாக பயிற்சி நிலையங்களில் நடாத்துதல் மற்றும் ஜிக் பொருளாதாரத்தை (Gig economy) அடிப்படையாகக் கொண்ட நிகழ்நிலை சுயதொழில்கள் (Online self employment based economy) ஏற்பாடுசெய்யப்படும். ஏனைய வாழ்க்கைத் தொழில்கள் தொடர்புற்ற முறைசார் பயிற்சிகளை வழங்குவதற்கும் பயிற்சியின் பின்னர் சான்றிதழ் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைசார் பயிற்சியின் பின்னர் தற்பொழுது ஈடுபட்டுள்ள தொழிலினை வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் புரியமுடியுமென்பதுடன் உணவு மற்றும் ஏனைய உற்பத்திகளை தரமாக வழங்கவும் முடியும். இதன் மூலம் அவர்களது தொழிற்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் அவர்களது வியாபாரமும் மேம்படுத்தப்படுத்தப்படும்.

இச் செயற்றிட்டத்திற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். வழங்கல் சங்கிலியினை மிகவும் வினைத்திறனாக மாற்றுவதற்கு மரக்கறி மற்றும் பழங்கள் போக்குவரத்துக்காக புகையிரத வசதிகளை பயன்படுத்தல்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இடைக்கால பட்ஜட் - 2022



2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தை திருத்துதல்

(11 ஆம் பக்கத் தொடர்)

மரக்கறி, பழங்கள், பூக்கள் மற்றும் தேயிலை உற்பத்திகளை மலை நாட்டுப் பிரதேசங்களிலிருந்து கொழும்பு மற்றும் நகர பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்தானது விவசாயிகள், உற்பத்தி யாளர்கள் மற்றும் வியாபார சமூகத்திற்கு முக்கியமானது போன்றே உணவுப் பொருட்கள் பழுதாகாமல் பாதுகாப்பதற்கு நுகர்வோருக்கும் முக்கியமானதாகும். இந்த வகையில் பொருட்கள் போக்குவரத்தினை தற்பொழுதுள்ள நடைமுறைகளிலிருந்து புகையிரத போக்குவரத்துக்கு மாற்றுவதனை ஊக்குவிப்பது அவசியமாகும். இதன் மூலம் வீண்விர யம், தாமதங்கள் மற்றும் செலவினத்தினைக் குறைக்க முடியும் என்ப துடன் புகையிரதத் திணைக்களத்திற்கு மேலதிக வருமானத்தினையும் ஈட்ட முடியும்.

ஆரம்ப கட்டமாக, தேவையான வசதிகளைக் கொண்ட புகையிரத மொன்று மரக்கறி, பழங்கள் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருட்களை ஹாலி எல புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை புகை யுரத நிலையத்திற்கு ஏற்றிச் செல்வதற்காக ஈடுபடுத்தப்படும். இதற் கேற்ப, ஹாலி எல, பண்டாரவளை, ஹப்புத்தளை, பட்டிப்பொல மற்றும் நாணு ஓயா புகையிரத நிலையங்களில் சரக்கேற்றல் வசதிகள் மேம்படுத்தப்படுதல் வேண்டும். அதேவேளை, பொருட்சேகரிப்பு நிலையங்களை தாபிப்பதற்கும் சேகரிப்பு நிலையங்களிலிருந்து உரிய புகையிரத நிலையங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற் கும் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் தொழில் முயற்சிகளின் பங்க ளிப்புடன் செயன்முறையொன்று அமுல்படுத்தப்படும்.

பொருட்களை கொழும்பிலிருந்து பதுளைக்கு ஏற்றிச் செல்வதற்கு மொத்த வியாபாரிகளை ஊக்குவிப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினைச் செயற்படுத்துவதற்கு புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இதனைச் செயற்படுத்துவதற்கு ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய் வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

புகையிரதத்துறை தரம் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுக்கான தனியார் முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல்

மக்களுக்கு வினைத்திறன்மிக்க உயர்தர போக்குவரத்து சேவையினை வழங்குவது அரசாங்கத்தின் முன்னுரிமைப்பணி என்ற வகையில், இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தற்பொழுது காணப்படுகின்ற உட்கட் டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி புகையிரதப் போக்குவரத்துச் சேவையினை அபிவிருத்தி செய்வதற்கு தனியார்துறை முதலீடுகளைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் களனிப் பாதை புகையிரத சேவையினை மாதிரி கருத்திட்டமொன்றாக (Model) அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்போது, முத லீட்டாளர்களை தெரிவு செய்தல் போட்டி விலைமனுக்கூறல் செயன்மு றையின் அடிப்படையில் இடம்பெறும்.

வர்த்தகம் மற்றும் முதலீடு

அரசாங்கத்தின் பேரண்டப் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்ட மானது, ஏற்றுமதிகள் மற்றும் ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டினை அதிகரிப்பதற்கு பிராந்திய மற்றும் பூகோள வழங்கல்ச் சங்கிலிகளை அடைந்து கொள்வதற்கு பூகோள பொரு ளாதாரத்துடன் மீள இணைவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கேற்ப அரசாங்கம், துணைத் தீர்வைகள் (Para tariffs) வடிவத்தில் காணப்படும் வர்த்தகத் தடங்கல்களை படிப்படியாக இல்லாதாக்க தீர்மா ணித்துள்ளது. இவ்விடயம், அத்தகைய தீர்வை தாராளமயமாக்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஒத் துழைப்பு வழங்குவதற்கான வர்த்தக செம்மையாக்கல் (Trade Adjustment Programme) நிகழ்ச்சித்திட்டமொன்றின் இணைப்பின் மூலம் நடைமுறைப் படுத்தப்படும்.

2018 இல் அதிகளவான பங்காளர்களின் விருப்பத்துடன் உருவாக்கப் பட்ட ஏற்றுமதி ஒத்துழைப்புக்கான வேலைத்திட்டமான தேசிய ஏற்றுமதி உபாயத்திற்கு அரசாங்கம் ஒத்துழைப்பினை வழங்கும்.

குறிப்பாக தென்கிழக்காசிய பிராந்தியத்தில் ஏற்றுமதி வளர்ச்சியின் தூண்டற் காரணியாகவிருந்த பிராந்திய பெறுமதி சங்கிலிகளுடன் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளை நாம் மீண்டும் ஆரம்பிப்போம்.



வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருங்கிணைப்பு மையமொன்றாக தொழிற்ப டுகின்ற வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான அலுவலகமொன் றினை தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்த அலுவலகமா னது உலகம் முழுதும் பரவி வாழ்கின்ற இலங்கையர்களின் பல்வேறு நிறுவனங்களை உள்ளடக்கியிருக்கும். முதலீடுகளைக் கவருதல், சுற் றுலாத்துறையினை ஊக்குவித்தல் மற்றும் அதனை ஒத்த விடயங்களை ஒருங்கிணைப்பது இதன் பிரதான பணியாகும். இதற்காக, வெளிநாட்டு இலங்கையர்களின் நிதியம் ஒன்றும் தாபிக்கப்படும். இந் நிகழ்ச்சித்திட் டத்திற்காக அங்கு வதிகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், பேகர் போன்ற அனைத்து இலங்கையர்களினதும் ஒத்துழைப்பினைப் பெறுவதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது.

மின்சார துவிச்சக்கர வண்டிகளை தயாரித்தல்

எரிபொருள் பாவணையினைக் குறைக்கும் நோக்கத்துடன் மின்சார துவிச்சக்கர வண்டிகள் தயாரிப்பானது உள்நாட்டு தொழிற்றுறை ஒன்றாக ஊக்கமளிக்கப்படும். எனவே, 50 சதவீதத்திற்கு அதிகமான பெறுமதி சேர்ப்புடன் உள்நாட்டில் மின்சார துவிச்சக்கர வண்டிகளைத் தயாரிப்பதற்கு தேவையான இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங் கள் மற்றும் உபகரணங்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும்.

ஆளுகையினைப் (Governance) பலப்படுத்தல் மற்றும் ஊழலுக்கெதி ராகப் போராடுதல்.

ஆளுகையினைப் பலப்படுத்துவதற்கும் ஊழலுக்கெதிராகப் போராடு வதற்குமான விரிவான சட்ட ஏற்பாடொன்று உருவாக்கப்படும். இந்த ஏற்பாட்டுச் சட்டகமானது சொத்துக்கள் வெளிப்படுத்தல் முறைமை யினை வலுப்படுத்துவதுடன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத் துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மையினை அதிகரிக்கவும் செய்யும். மேலும், ஊழலுக்கான அடிப்ப டைக் காரணங்களை இல்லாதொழிப்பதற்கும் வெளிப்படைத் தன்மை யினை உருவாக்குவதற்கும் தொழில்நுட்பம் உட்சேர்க்கப்பட்ட முறை மைகளை ஊக்குவிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

முடிவுரை

புத்துயிரளிக்கப்பட்ட பொருளாதார மொன்றினை உருவாக்கும் பய ணத்திற்கான அடித்தளத்தினை இந்த முன்மொழிவுகளினூடாக நாம் தயார்படுத்தியுள்ளோம். இங்கு மற்றுமொரு முக்கிய விடயத்தினை உங் களது கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகின்றேன்.

நான் இதற்கு முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டவாறு 2025 வருடமளவில் ஆரம்ப வரவு செலவுத்திட்டத்தில் மிகையொன் றினை உருவாக்குவது எமது இலக்காகும். பொருளாதார வளர்ச்சி வீதத் தினை ஸ்திர நிலைக்கு உயர்த்துவது எமது முயற்சியாகும். 2026 ஆம் வருடமளவில் உறுதியான பொருளாதார அடித்தளமொன்றினை உரு வாக்குவது எமது அபிலாஷையாகும். தற்பொழுது பொதுப்படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 110 சதவீதமாகக் காணப்படுகிறது. 2032 வருடமளவில் இதனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 100 சத வீதத்தினைவிட குறைவான மட்டத்திற்கு கொண்டு செல்வது எமது இலக்காகும்.

தேசிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் தேசமும் அதன் மக்களும் கட்டியெழுப்பப்படுமாயின், சுதந்திரத்தின் நூற்றாண் டினை கொண்டாடுகின்ற 2048 வருடமளவில் எமது நாடு முழுமையாக அபிவிருத்தியடைந்த நாடொன்றாக மாறுவதற்கு முடியும்.

இதன்பின் நாம் தொடர்ந்தும் கடன் உதவியில் தங்கியிருக்கின்ற நாடொன்றாக இருக்கமுடியாது. வலுவான பொருளாதாரங்களைக் கொண்ட ஏனைய நாடுகளினால் தலையீடு செய்யக்கூடிய துரும் பொன்றாக நாம் தொடர்ந்தும் இருக்கமுடியாது. எமது ஒருமித்த நோக்கு அனைத்தும் சுயாதீனமாக எழுந்து நிற்பதற்கு வலுவானதும் நிலையான துமான நாடொன்றாக எமது நாட்டினை மாற்றியமைத்தல் வேண்டும். எமது நாட்டின் வியாபார தொழில் முயற்சிகளை உலக சந்தையில் போட்டியிடும் நிலைக்கு எடுத்துச் செல்லல் வேண்டும். விவசாய ஏற் றுமதிகள் மீதான உலகச் சந்தையில் இடமொன்றினைப் பெற்றுக் கொள் வதற்கு நாம் தொடர்ந்தும் முயற்சி செய்ய வேண்டும். சமூக நீதியினைப் பேணக்கூடிய உரிய சந்தர்ப்பங்களை வழங்குகின்ற ஒழுக்கவிழுமிய மிக்க அறிவார்ந்த சமூகமொன்றினை நாம் உருவாக்குதல் வேண்டும்.

பொதுவான இணக்கப்பாட்டுடன் ஐக்கியமாக ஒன்றுபட்டு செயற் படாதவரை இவை அனைத்தினையும் எம்மால் அடைந்து கொள்ள முடியாது. இந்த எதிர்பாராத நிலைமையினை எதிர்கொள்வது எம் அனைவரினதும் பொறுப்பு என்ற வகையிலும் இந்நாட்டினதும் தேசத் தினதும் தேவைகளை முன்னுரிமைப்படுத்த வேண்டியதனாலும் இந்த பாராளுமன்றத்திலுள்ள அனைத்து கட்சிகளையும், சர்வகட்சி அரசாங் கமொன்றுடன் இணைந்து கொள்ளுமாறு நான் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகின்றேன்.

அரசாங்கத்தின் குறித்த செயற்பாடுகளினால் நாம சர்வகட்சி அரசாங் கத்துடன் இணையமாட்டோம் என சில கட்சிகள் குறிப்பிடுகின்றன. சில கொள்கைகள் காரணமாக இணைந்துகொள்ள முடியாதென வேறுசில கட்சிகள் குறிப்பிடுகின்றன.

இத்தருணத்தில் நான் அவர்களுக்கு வலியுறுத்திக் கூறவேண்டிய விட யமொன்று உள்ளது. சர்வகட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் அல்லது அதன் கொள்கைகளை தீர்மானிப்பது நான் அல்ல. இது ஒரு தனி மனிதன் அல்லது ஒரு கட்சியினால் நிர்வகிக்கப்படமாட்டாது. அரசாங் கத்தின் அனைத்துப் பங்காளர்களினதும் இணக்கப்பாட்டின் அடிப்படை யில் தான் உருவாக்கப்படும். எனவே, நீங்கள் ஏற்றுக் கொள்ளாத கொள் கைகள் அல்லது நடைமுறைகள் காணப்படுமாயின் அவற்றை சர்வகட்சி அரசாங்கத்திற்குள் மாற்றியமைப்பதற்கான உரிமையும் அதிகாரமும் உங்களிடம் உள்ளதென நான் மீண்டும் இச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

எனவே, தனிப்பட்ட அரசியல் இலக்குகளை புறந்தள்ளிவிட்டு நாட்டி னையும் தேசத்தையும் மீளக் கட்டியெழுப்புகின்ற பணியில் இச்சபையி லுள்ள உங்கள் அனைவரையும் இந்நாட்டிலுள்ள அனைத்து பிரசையை யும் ஒன்றிணையுமாறு நான்கோரிக்கை விடுகின்றேன். நாம் அனைவரும் ஒன்றிணைந்தால் எமது தாய் நாட்டினை உயர்வடையச் செய்ய முடியும். மாறிவருகின்ற உலகத்துடன் சரிசமனாக நின்று போட்டியிட்டு வெற் றியடையும் தேசமொன்றினை உருவாக்குவதற்கு எம்மால் முடியும். நாம் இச் சந்தர்ப்பங்களை தவரவிடுவோமாயின், உலகத்தின் விழிம்பு நிலைக்குத் தள்ளப்படுவோம்.

மகாபொல புலமைப் பரிசில் தொடர்பாக தயாரிக்கப்பட்ட தொலைக் காட்சி நாடகத்திற்கு பண்டார எஹலியகொடவினால் எழுதப்பட்ட "ஆஜி தபர லாஹிலா" பாட்டின் வரிகளை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

"அப பமனத எகதன கரகென்னேஅப தனிகர லோகய திவயன்னே"

"நாம் மட்டுமா ஓரிடத்தில் சுழன்று கொண்டிருக்கிறோம் – எம்மை தனித்துவிட்டு உலகம் ஓடிச்செல்கின்றது."

அதனால், இனிமேலும் ஓரிடத்திலேயே சுழன்றுகொண்டிருக்காது எமது நாட்டுக்காக ஒன்றிணைவோம். உலகத்துடன் முன்னோக்கி விரைந்து செல்வதற்கு இயலுமான பலம்வாய்ந்த பொருளாதாரமொன் றையும் அறிவு நிறைந்த சமுதாயமொன்றினையும் உருவாக்குவோம்.

தேவையான காணிகளை வழங்குதல், மின்சார சபையின் செயற்பாடு களை மீள்கட்டமைப்பதன் மூலம் மின்சாரத்தினை பெற்றுக் கொள்ளும் இயலுமையை மேம்படுத்தல் மற்றும் இலங்கையின் எரிசக்தி உற்பத்தி செலவினை குறைத்தல் ஆகியவற்றுக்காக மீள் புதுப்பிக்கக்கூடிய எரி சக்தி மூலங்களை மேலும் விரிவாக்குவதற்கு அரசாங்கம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஏறக்குறைய 80 சதவீதமான காணிகளுக்கு அரசாங்கம் உரிமையாளர் என்ற வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தேவையான வசதிகளுடன் காணிகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும். ஆரம்பத்தில் பல்வேறு உபகாரப் பத்திரங்களின் கீழ் கையளிக்கப்பட்டிருந்த காணிகளுக்கான உரித்துச் சாதனங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை நாம் செயற்படுத்தவி ருக்கின்றோம்.


நூல் வெளியீடும், கௌரவிப்பு விழாவும்













லேக்ஹவுஸ் நிறுவனத்தின் வெளியீடுகளான தினகரன்,தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் எமது சிரேஷ்ட ஊடகவியலாளர் இக்பால் அலி தினகரனில் எழுதிய நேர்காணல் பத்திகளின் தொகுப்பான 'இளம் தலைமைத்துவ ஆளுமையும் சஹீட் எம். ரிஸ்மியுடனான நேர்காணலும்' எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) கொழும்பு 3 மென்டரினா ஹோட்டலில் நடைபெற்றது.

அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தலைவர் சஹீட் எம்.ரிஸ்மியின் ஏற்பாட்டில் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா தலைமையில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

நூல் அறிமுகவுரை; லண்டனிலிருந்து...) பொறியியலாளர் இர்பான் இக்பால். சிரேஷ்ட ஊடகவியலாளர் நிகழ்த்தினார்.ஆசியுரை :ரி. செந்தில்வேலவர், (பிரதம ஆசிரியர் தினகரன்,தினகரன் வாரமஞ்சரி)

வாழ்த்துரைகள் :.ரவூப் ஹக்கீம் பா.உ தலைவர்,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,

ஊடகவியலாளர் என். எம். அமீன் தலைவர், முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா.

எம். எம். பீர்முஹம்மது தலைவர், மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவை ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல் கருத்துரை :ஏ. எம் நஹியா (முன்னாள் பணிப்பாளர் நாயகம், புனர்வாழ்வு மீனவர் ,வீடமைப்பு மீனவர் நலன்)கவிஞர் ரா. நித்தியானந்தன் (முன்னாள் விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)நூலாசிரியர் உரை : இக்பால் அலி,ஏற்புரை : சஹீட் எம். ரிஸ்மி (தேசியத் தலைவர், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவை) ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் நாட்டின் உயர்ச்சிக்காகவும் மக்களின் மேம்பாட்டுக்காகவும் அர்ப்பணிப்போடு சேவையாற்றி வரும் மக்கள் நலன் பேணும் துறை சார்ந்த இளம் தலைமைத்துவங்களும் ஊடகத்துறை சார்ந்தவர்களும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

ஊடகத்துறை சார்ந்தோர்.....

T.SENTHIL VELAVAR Chief Editor Thinakaran & Varamanjari

Marlin Marikkar, Associate Editor, Thinakaran & Varamanjari

S. Shrikanth, Chief Sub Editor, Thinakaran & Varamanjari

J.G. Stephan, Asst. News Editor – Virakesari, Executive Member: UpCountry Education Development society. Former Secretory – Sri lanka Parliament Journalist Association

k.R.P Haran, Chief editor, Thinakkural News paper.

M.H.F Husna, Sub Editor, Thinakkural News paper.

A.R.A.Fareel. Senior Sub Editor , Vidivelli.

M. Siddique Haniffa, Senior News Editor ITN, Vasantham TV

M.S.M. Irfan, Assistant Manager News & Programme Vasantham TV

C.M.B. Ziyam, Director Tamil News, Sri Lanka Rupavahini Corporation.

M. J. F. Rinoosiya, Head of the Muslim Service, Sri Lanka Broadcasting Corporation.

Ashraff A. Samad, Freelance Journalist.

தனிமையில் வாழ்ந்த பெண்ணின் பரிதாப நிலை

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

தனிமையில் வாழும் பெண்ணின் வீட்டை காட்டு யானை அழித்து துவம்சம் செய்ததால், அப்பெண் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளார். இந்நிலையில்,எவ்வித ஆதரவுமின்றி வாழும் தனக்கு ஆதரவுக்கரம் நீட்டுமாறு அப்பெண் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள திக்கோடைக் கிராமத்தில் கணவரைப் பிரிந்த நிலையில்,குடிசையில் இவர் வாழ்க்கை நடாத்திவருகின்றார். நாளாந்தம் காட்டு யானைகளின் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்த இப்பெண்ணின் வீடும் இப்போது, காட்டு யானையால் சேதமாக்கப்பட்டுள்ளது. தனது ஒரே மகளை ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் நிலையத்தில் கல்விகற்க விட்டுள்ள, இத்தாய் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகின்றார். தற்போது அந்த வேலைக்கும் இவர் செல்வதில்லை எனத் தெரிய வருகிறது.

இலங்கை முதலீட்டுச் சபை
பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2022 ஆகஸ்ட் 31ஆம் திகதிய ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

INVITATION FOR BIDS FOR SUPPLY, INSTALLATION AND MAINTENANCE OF 26 NOS. OF BRANDED PERSONAL COMPUTERS TO THE BOARD OF INVESTMENT OF SRI LANKA AT WEST TOWER, WORLD TRADE CENTRE, ECHELON SQUARE, COLOMBO 01

CONTRACT NO. BOI/S&S/Q/100/2022

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணைய தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011 2346159 / 077 3502937 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக நிறைவேற்றுப் பணிப்பாளர் (பாதுகாப்பு மற்றும் தீ) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
இலங்கை முதலீட்டுச் சபை.

நீர்ப்பாசன அமைச்சு
நீர்ப்பாசனத் திணைக்களம்
கேள்வி அறிவித்தல்
சேவை நிலையிலற்ற வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் விற்பனை

1. இரத்மலானை, அம்பாறை, ஹல்பாதொட்ட, ரம்பேவ மற்றும் லுணுகம்வெஹெர இயந்திர பொறியியலாளர் அலுவலகம் மற்றும் ஹுருலுவெவ, இராஜாங்கனை மற்றும் கவுடுல்ல நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகங்களில் உள்ள சேவை நிலையிலற்ற வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை அப்புறப்படுத்துவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல்களை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இத்தால் கோருகிறார்.

வகுதி	பொருட்களின் விபரம்	எண்ணிக்கை: இரத்மலானை	எம்பாறை	ஹல்பாதொட்ட	ரம்பேவ/ ஹுருலுவெவ/ இராஜாங்கனை	லுணுகம்வெஹெர	கவுடுல்ல / மின்னேரிய	மீளளிக்கப்படும் வைப்பு (ரூபா)
01 மோட்டார் வாகனங்கள்	கார், ஜீப், டபள் கெப்	04	-	-	-	-		500.00 முதல் 30,000.00 வரை
02 பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள்	டிராக்டர், லோடர், புல் வெட்டும் இயந்திரங்கள், நீர்ப் பம்பிகள், அதிர்வாக்கி உருளைகள், கொங்கிறீட் கலவை இயந்திரங்கள், மின் பிறப்பாக்கிகள், வைபிரேட்டிங் ரம்னர், எக்ஸ்கவேட்டர், கொங்கிறீட் போக்கர் வைபரேட்டர், சங்கிலி வாள்கள், எயார் கொப்பிரசர்கள்	13	31	14	25	03	02	500.00 முதல் 90,000.00 வரை
03 இரும்புச் சிதைவுகள்	ஜீப், மோட்டார் சைக்கிள், டபள்கெப், டிராக்டர் உதிரிப்பாகங்கள், படலை உதிரிப்பாகங்கள், இரும்புச் சிதைவுகள், மரங்கள், சீலிங் சீட்கள், அஸ்பெஸ்டஸ் சீட்கள், படகுகள்	12	04	01	11	01	-	500.00 முதல் 46,500.00 வரை

2. 2022-08-31ஆம் திகதி முதல் 2022-09-27ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையிலான அலுவலக நேரங்களில் ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் 1000.00 ரூபா மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பின்வரும் அலுவலகங்களில் செலுத்துவதன் பேரில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பொருட்களைப் பரீட்சிப்பதற்கான அனுமதிப்பத்திரங்கள் கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்படும். கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு இயைபுடைய அலுவலகத்திலும் ஒவ்வொரு உருப்படிக்காகவும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

இயைபுடைய உருப்படிகளைச் பரீட்சிக்குமிடம்	கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் இடம்	
இரத்மலானை	கணக்காளர் (களஞ்சியம்), 1ஆம் மாடி, அறை இல. 113, நீர்ப்பாசனத் திணைக்கள தலைமை அலுவலகம், கொழும்பு-07. தொ.பே. 011-2581780	கணக்காளர் (களஞ்சியம்), 1ஆம் மாடி, அறை இல. 113, நீர்ப்பாசனத் திணைக்கள தலைமை அலுவலகம், கொழும்பு-07. தொ.பே. 011-2581780
அம்பாறை	நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், புதிய நகரம், அம்பாறை. தொ.பே. 063-2222936	
ஹல்பாதொட்ட	நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், பெலிகல சந்தி, காலி. தொ.பே. 091-2246445	
ரம்பேவ/ ஹுருலுவெவ/ இராஜாங்கனை	நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், விமான நிலைய வீதி, அனுராதபுரம். தொ.பே. 025-2225108	
லுணுகம்வெஹெர	நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், தம்பரவெவ, திஸ்ஸமஹாராம தொ.பே. 047-4937805	
கவுடுல்ல/மின்னேரிய	நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், பொலன்னறுவை. தொ.பே. 027-2222216	

3. வாரத்தின் வேலை நாட்களில் இரத்மலானை, அம்பாறை, ஹல்பாதொட்ட, ரம்பேவ மற்றும் லுணுகம்வெஹெர வேலைத் தளங்கள் மற்றும் ஹுருலுவெவ, இராஜாங்கனை மற்றும் கவுடுல்ல நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட உருப்படிகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம் .
4. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வகுதியின் பெயர்'' மற்றும் '' சேவை நிலையிலற்ற வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளுக்கான விலைமனு'' எனவும் குறித்த வேலைத் தளத்தின் பெயரையும் தயவு செய்து குறிப்பிடவும்.
5. பூரணப்படுத்திய முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் படிவங்களை 2022-09-28ஆம் திகதி பி.ப. 12.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மேற்படி முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் 3ம் மாடியிலுள்ள பிரதான நிதி உத்தியோகத்தரின் 311ஆம் இலக்க அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
6. விலைமனுக்கள் பி.ப. 12.30 மணிக்கு மூடப்பட்ட உடனடுத்து அதே நாளில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 4ம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

பொறி. கே.டி.என். சிறிவர்தன,
நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
த.பெ. இல. 1138, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.
திகதி: 2022-08-31

கிழக்கின் குரல்

சட்டவிரோத கடல் பயணங்களில் வெளிநாடு செல்ல முயற்சிப்போர் அதிகரிப்பு

கைதான கர்ப்பிணித்தாய், சிறுவர்கள் விடுதலை

ரொட்டவெவ குறூப் நிருபர்

அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட கர்ப்பிணிப் பெண் உட்பட இரண்டு சிறார்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.இவர்களுடன் கைதான ஏனையோரை எதிர்வரும் (05) வரை விளக்க மறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. திருகோணமலை நீதிமன்ற நீதவான் ஐ. பயாஸ்ரஸாக் முன்னிலையில் நேற்று (30) குறித்த சந்தேக நபர்கள் 31 பேரும் ஆஜர் படுத்தப்பட்டபோதே, இவ்வுத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

கிழக்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் (29) இந்த 31 பேரும் கடற் படையினரால் கைதுசெய் யப்பட்டனர். இவர்களில், 50 வயதுக்கு மேற் பட்ட பெண்ணொருவரும் கர்ப்பிணித்தாய், அவரது இரண்டு சிறுவர்களும் கைது செய்யப்பட் டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.இதன்போது,

கர்ப்பிணியாக இருக்கின்ற வேளையில் மிகவும் கரிசனையுடன் நடக்க வேண்டுமெனவும், தேவை யற்ற விதத்தில் பயணங்கள் செல்லக்கூடாது எனவும் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதவான் பயாஸ்ரஸாக் எச் சரித்தார்.பின்னர்,

கர்ப்பிணிப்பெண்ணையும், அவருடைய இரண்டு சிறார்களையும் இரண்டு இலட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் செல்லுமாறு நீதவான் கட்டளையிட்டார்.

அத்துடன் வாழைச்சேனை, கல்முனை அக்கரைப்பற்று பகுதிகளைச்சேர்ந்த ஐந்துபேர் கடற் படையினரால் கிழக்கு கடற் பரப்பில் நேற்று கைது செய்யப்பட்டனர்.

இருப்பினும், அனுமதிப்பத்திரத்துடன் ஆழ்க டல் மீன்பிடிக்க சென்றவேளையில், அவுஸ்திரே லியா செல்ல முற்பட்டதாகக் கூறி, கடற்படை யினர் தங்களை கைது செய்ததாக இந்த ஐவரும் நீதிமன்றில் தெரிவித்தனர்.

ஆனாலும், சட்டவிரோத பயணம்செய்த குற்றச் சாட்டில்,இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக திரு கோணமலை துறைமுக பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் அனைவரையும் எதிர்வரும் (13) வரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

பொன்செல்வநாயகத்தின் நூல் வெளியீட்டு விழா

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

பொன்செல்வநாயகம் எழுதிய மட்டக்களப்புத் தமிழக பாரம்பரிய மருத்துவம் எனும் நூல் அண்மையில் (28) ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு தெவநாயகம் கூட்டுறவு மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 106வது வெளியீடாக இந்தநூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண முன்னாள் பணிப்பாளரும், கிழக்கு மாகாண பாலர்பாடசாலை பணியகத்தின் முன்னாள் பணிப்பாளருமான பொன் செல்வநாயகம் இந்நூலை எழுதியுள் ளார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராசா சரவணபவன் உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், வர்த்தக பிரமுகர்கள், எழுத்தாளர்கள் கலைஞர்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வெருகலம்பதி ஸ்ரீ சித்திவிநாயகர் மஹோற்சவம் ஆரம்பம்





அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

முதலில் யாக பூஜைகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து வசந்த மண் டபப் பூஜையும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஏற்றப்படும் கொடியானது, கோயில் கங்கானத் தினால் உள்வீதியால் மேளதாளங் களோடு அரோகரா கோசத்துடன் கொண்டு வரப்பட்டு அங்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்ற பின் கொடியேற்றப்பட்டது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த மஹோற்சவம் (16 09 202 வெள்ளிக்கிழமை காலை 7.33 மணிக்கு மஹாவலி கங்கையில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். வரலாற்று சிறப்புமிக்க,சின்னக்கதிர்காமம் என்றழைக்கப்படும் இவ்வாலயம், திருகோணமலை வெருகல் பகுதியில் அமைந்துள்ளது.

சர்வதேச மலேரியா தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டியில் சாதனை

தோப்பூர் குறூப் நிருபர்

சர்வதேச மலேரியா ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கடந்த வருடம் சுகாதார அமைச்சால்,நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான சித்திரப் போட்டியில் மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஒன்பது மாணவிகள் தேசிய ரீதியில் சான்றிதழ்களைப் பெற்று சாதனை படைத்துள்ளதாக கல்லூரியின் முதல்வர் ஜே. எம். மாகிர் தெரிவித்தார்.

1 ஐ எம்.ஹஸானி
2. என்.ஆர் எஸ்.பரா
3. ஆர்.எப்.றினா
4. ரீ எஃப்.ஜஸா
5. எம் என். ஹம்தா
6. எஸ்.எப்.ஹம்தா
7. எச்.எப் ஹம்தா
8. எம்.எச்.எப்.அஸ்ரின்
9. ஏ எப்.அம்னா ஆகியோரே சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.



குறித்த இப்போட்டியில், மாணவிகளை பங்கு பெறச் செய்து முறையான பயிற்சியும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.அனீஸ் (அனூன்) மற்றும் திருமதி நிம்சானா ஹுசைன் ஆசிரியை மற்றும் இப் போட்டிக்கான பல்வேறு ஆலோசனைகள், ஒழுங்குபடுத்தல்களை வழங்கிய கல்லூரியின் முதல்வர் ஜே. எம். மாகிர் மற்றும் பிரதி அதிபர் திருமதி. சுகாதா முபாரக் ஆகியோருக்கு பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சர்வதேச தினம் தண்ணாமுனையில்





பாசிக்குடா நிருபர்

மட்டக்களப்பு தண்ணாமுனை மியானி கேட்போர் கூடத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் சர்வதேசதினம் நேற்று 30) செவ்வாய்க்கிழமை நினைவு கூரப்பட்டது.இந்நிகழ்வானது அகம் மனிதாபிமான வள நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது உள்நாட்டு மற்றும் சர்வதேச பொறிமுறையின்கீழ், இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சம காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக கிழக்கு மாகாண இளைஞர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

இதில் குறிப்பாக காணாமலாக்கப்பட்டோர்களின் சமவாயம்,இலங்கையில் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், சவால்கள், மற்றும் காணாமலாக்கப்பட்டோ ரது விடயத்தில் நீதிக்காக எவ்வாறு பங்களிப்பு செய்யலாம் என்பன தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. சட்டத்தரணி செல்வி,பிரசாந்தினி உதயகுமார்,மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ஏ.எல், இஸ்ஸதீன், மற்றும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் இணைப்பாளர் க.லவகுகராசா, ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரையாற்றியதுடன் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டனர்.

எழுகவி ஜெலீலுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம்



பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நாட்டாரியல் விருதுபெற்ற கவிஞர் எழுகவி ஜெலீலை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு, ஒலுவில் பிறீன் வாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

பாவேந்தல் பொன்விழாக்குழுவின் ஏற்பாட்டில் கலாபூஸணம் பாலமுனை பாறூக் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் நசாக், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தெளபீக் உட்பட பிரதேச எழுத்தாளர்கள் கலைஞர்கள் ஊடகவியலாளர்கள் என பலர் இதில்,கலந்து கொண்டனர்.

கடலரிப்பை தடுக்க கருங்கல் அணைக்கட்டு

ஒலுவில் விசேட நிருபர்

நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுப்பதற்கு, கடல்ஓரம் பேணல் மற்றும் கடல்மூல வள முகாமைத்துவ திணைக்களத்தால் முதல் கட்டமாக கருங்கல்லிலான அணைக்கட்டு நிர்மாணிப்பதற்கு 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல்லத்தீப் தெரிவித்தார். நிரந்தரமாக கடலரிப்பை தடுப்பதற்கான கருங்கல்லிலான நிரந்தரத் தடுப்புச்சுவரினை நிர்மாணிப்பதற்கு செலவு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடலரிப்பால் அப்பிரதேச மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு, பொருளாதார ரீதியாகவும், பாதிக்கப்பட்டுள்ளனர். கடலரிப்பு தொடர்ச்சியாக ஏற்பட்ட வண்ணம் உள்ளதால் மீனவர்களின் வாழ்வாதாரம், தென்னந்தோட்டங்கள், வீடுகள் மற்றும் பொது கட்டங்கள் என்பன கடலரிப்பில் சேதமாகியுள்ளன.

அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, சென் நீதியன் மாவத்த, இல. 14இல் வசிக்கும் - கம்பொல வடுகே சுனில் அந்தனி பொன்சேகா (தே.அ.அ. இல: 503573300V) ஆகிய நான், பொது மக்களுக்கு மற்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் தெரிவிப்பதாவது நீர்கொழும்பு, சென் நீதியன் மாவத்த, இல. 14 இல் வசிக்கும், பொத்துபிட்டியகே ரவிந்ர ஜனக்க டி சில்வா (தே.அ.அ. இல. 652162584V) இல் வசிக்கும் பொதுபிடியகே ரவிந்ர ஜனக்க டி சில்வா (தே.அ.அ. இல. 652162584V) மற்றும் தெமங்ஹந்திய, திவுலபிட்டிய வீதி, இல. 224/24 இல் வசிக்கும் பொத்துபிட்டிகே நிலந்த டி சில்வா (தே.அ. இல. - 711323432V) என்பவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட, சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு மங்கள தீபால் சமந்த வினால் எழுதி உறுதி செய்த இல. 2054 மற்றும் 2012.06.12 விசேட அட்டோர்ணி அதிகாரப்பத்திரத்தை பத்தரமுல்ல பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அட்டோர்ணி அதிகாரப் புத்தகத்தில் 10ஆம் தொடரின் 89 ஆம் பக்கத்தில் 5757 தினப்புத்தக இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அட்டோர்ணி அதிகாரத்தை இன்று முதல் இரத்துச் செய்து அதிகாரமற்றதாக்கப் படுவதாகவும். இன்றைய தினம் முதல் பொத்துபிட்டியகே ரவிந்ர ஜனக்க டி சில்வா மற்றும் பொத்துபிட்டியகே நிலந்த டி சில்வா என்பவரால் என் சார்பாக மற்றும் எனது பெயரில் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களும் அதிகாரம் அற்றதாகும் எனவும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

கம்பொல வடுகே சுனில் அந்தனி பொன்சேகா.

உள்ளூராட்சித் திணைக்களம் - வடக்கு மாகாணம்.

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய செல்லத்துரை பிரணவநாதன் ஆகிய என்னால் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் 66(எ) பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் வடக்கு மாகாணத்திற்குள் அமைந்துள்ள காரைநகர் பிரதேச சபையின் வெற்றிடமாகவுள்ள உபதவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2022.09.06 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு காரைநகர் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

செல்லத்துரை பிரணவநாதன்,
உள்ளூராட்சி ஆணையாளர்,
வடக்கு மாகாணம்

உள்ளூராட்சித் திணைக்களம்,
வடக்கு மாகாணம்,
முதியோர் இல்ல வளாகம்,
A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
2022.08.29

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

பெறுகை விளம்பரம்

பாவித்த இயந்திராதிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக மீள் கேள்வியிடல்

கேள்வி இல. SDSQ/2022/S-2/P/M/01

1. இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன பெறுகைக்குழுவின் தலைவரினால் அந்நிறுவனத்தின் பாவித்த இயந்திராதிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட வாகனங்களை (Plant & machinery & Scrap vehicles) விற்பனை செய்வதற்காகத் தகைமையுள்ள உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணமாக 1000.00 ரூபாவை செலுத்திய பின்னர் 5ஆம் மாடியிலிருந்து வேலை நாட்களில் (திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிழமை வரையும்) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்குமிடையில் வழங்கல் பிரிவிலிருந்து கேள்வி விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்.
3. உங்கள் விலைமனுக்கள் 2022-09-13ஆம் திகதி பிப. 2.00 மணிக்கு முன்னர் பிரதான அலுவலக தரை மாடியிலமைந்துள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுதல் அல்லது அந்நேரத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.
4. விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்படி இயந்திராதிகளை (பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் மற்றும் வாகனங்கள்) எமது பேலியகொடையிலுள்ள முற்றவெளியில் பரீட்சித்துப் பார்க்கலாம். (இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம், வேலைத்தள இலக்கம் 102, மத்திய வேலை நிலையம், பேலியகொட) இயந்திராதிகளைப் பரிசீலனை செய்து கொள்வதற்காக வேலை முகாமையாளரைத் தொடர்பு கொள்ளவும். 0112 931450.
5. மேலதிக விபரங்களுக்கு இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனப் பிரதான பெறுகை அதிகாரியைத் தொடர்புகொள்ளவும். தொ.பே. இல. 0112434485.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்,
இல. 130, W.A.D. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு -02.

ASIA CAPITAL PLC

ஏஷியா கெப்பிட்டல் பீஎல்சியின் PQ 119

இல. 59, சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 07. இலங்கை.

ஏஷியா கெப்பிட்டல் பீஎல்சியின் 30வது இணையவழி (Virtual) வருடாந்தப் பொதுக் கூட்டம் தொடர்பான அறிவித்தல்

2022 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டுக்காக ஏஷியா கெப்பிட்டல் பீஎல்சியின் 30வது இணையவழி (Virtual) வருடாந்த பொதுக்கூட்டமானது எதிர்வரும் 30ஆம் திகதி செப்டெம்பர் மாதம் 2022ஆம் ஆண்டு காலை 10.00 மணிக்கு ஒன்லைன் (audio visual) மூலமாக நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

2022 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான ஏஷியா கெப்பிட்டல் பீஎல்சியின் வருடாந்த அறிக்கையினை கொழும்பு பங்குச் சந்தையின் இல.7.5 (b) விதிமுறைகளுக்கமைய பங்குச் சந்தையின் இணையத்தளத்தில் (www.cse.lk) பெற்றுக் கொள்ள முடியும்.

குறிப்பு:

வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்துக்கொள்ள விரும்பும் பங்குதாரர்கள் / பங்குதாரரின் பதிலாளர்கள், கொழும்பு பங்குச் சந்தையின் இணையத்தளத்தில் (cse.lk) பிரசுரிக்கப்பட்டுள்ள படிவத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் தங்களை பதிவு செய்து கொள்ள முடியும்.

ஏஷியா கெப்பிட்டல் பீஎல்சி நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையின்
உத்தரவுக்கு அமைய,

செயலாளர்கள்,
பீ.ஆர்.செக்ரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கொழும்பு.
30 ஆகஸ்ட் 2022

நீர் வழங்கல் அமைச்சு

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இல.	ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம்	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	தேவையான விலை மனு பிணை	தேவையான தகைமை	VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா)	தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	இறுதித் திகதி மற்றும் நேரம்
	சிவில் கேள்விகள்						
